KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஹு மார்ச் மீ 16உ [No. 11

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 201
2. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலமையர் B.A.,B.L. 203
3. தமிழ்ப் பாடம்
(நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 205
4. அப்பர் (64 கலை-வியாகரணம்-குற்றியலுகரம்)
E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 207
5. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 208
6. தேவகி (ஓர் நாவல்)
K. இராஜகோபாலன் 209
7. வாலி வதை (ஓர் ஆராய்ச்சி)
V. V. ஸ்ரீநிவாஸாச்சாரியார், B.A.B.L. 211
8. கலித்தொகை (பாலைக்கலி 8.)
T. A. கனகசபாபதி முதலியார் 214
9. யாப்பிலக்கணம் (செய்யுள்—வெண்பா)
வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 215
10. பொதிகை நிகண்டு (காகாரம், கிகரம்)
S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., 216
11. வர்த்தமானம் 219

## கலாநிலயம்

### சொன்னல் விரோதம் 10.

189144.

மணவினையி னமைதியி னிமித்தமாக இக்கட்டுரைகளைத் துவக்கிய நாம், வாழ்க்கைத் தத்துவத்தைத் தொடர்ந்து இதுகாறுங் கூறிவந்தோம். இனி, மணமுறை வழக்கங்களின் அமைதியை, சில தினங்களுக்குமுன், "Federated India" என்னும் பத்திரிகையில், பிரடரிக் பின்காட் (Frederick Pincott) என்னும் ஓர் ஆங்கில அறிஞர் விளக்கி வரைந்திருக்கும் கட்டுரையைப் பெயர்த்தெழுதுவதோடு முடிக்கலாம். இவர் சொல்வனவற்றை ஆங்கிலேயரனைய மேனாட்டினர்மட்டுமே தமக்கு விரோதமெனக்கருதுவாராயின் போதுமே.

"It may with safety be assumed that, when many millions of intelligent people practise certain customs for thousands of years, there must be something in those customs to redeem them from the charge of folly or criminality. This should be frankly admitted in the case of the Hindus, who have been not inappropriately called by Prof. Max Muller, 'a nation of philosophers.' It is certain that the whole religious and social system of the Hindus is the outcome of centuries of profound thought and carefully recorded experience. Whatever we English people may be able to teach them in mechanical arts and in experimental science, we have very little, if anything, to teach them in matters of social philosophy. Everything tending to the peace and well-being of society, and the safe and enduring principles regulating the united and harmonious action of the various classes of people, has been long since reduced, by the Hindus, to well-ordered rules, deduced from the unchanging facts of Nature. Hindu social science is perfect as a system, any interference with it involving the reconstruction of the whole. It is built on a long observance of natural laws, and on careful utilization of those laws for securing general content and the greatest happiness of the greatest number. The Hindus have, in fact, solved the great social problem ages ago; and any introduction among them of our crude ideas can only result in mischief, and tend to bring the Hindus into the same chaotic scramble of antogonistic interests, which is the characteristic of our own disgraceful social muddle. "Physician, heal thyself," would be a justly deserved sarcasm, if uttered by a Hindu. In all social matters, the English are far more fitted to sit at the feet of the Hindus and learn as disciples than to attempt to become masters.

"An early marriage ceremony cannot be stopped without destroying parental control. In England, we are prepared to think it a shocking thing that parents should give their children in marriage to whomsoever they please. Our feelings are due to our own habits and nothing more: for opinion on all social matters is due to education and association. In India the parental choice is regarded as necessary, and as a grave responsibility, a father will hamper his future life with pecuniary liabilities in order to secure a suitable husband for his daughter. This is sufficient to show that marriage is not, in India the frivolous thing it has become in the West. By the Hindu system every girl has a natural guardian, who is solemnly bound to see her properly married, at any expenditure or trouble and money. Of course the advantage is purchased

by the surrender of the children's choice; but is self-choice an advantage at all? No man, woman or child in India expects the parties to choose, and, therefore, they have no sense of the loss of privilege. On the contrary, a girl without a guardian to choose for her, is held to be in a pitiable condition.

The absence of self-choice in India obviates the fluttering uncertainty under which English girls live; it imparts to marriage a sense of destiny which has a beneficial effect on the after life. A boy and girl in India grow up in the knowledge that they are destined for each other; they know that their lives have to be passed together: and from their earliest years they learn to adapt themselves to their future condition. It is universally admitted that compromise and concession form the solid basis of matrimonial happiness and the sense of destiny imparted by early marriage powerfully promotes a spirit of compromise. We must also understand that the Hindu marriage contract is inviolable, and the course of life is inevitable; the minds of the parties are thus in the proper frame for making the best of things. These wise provisions have stood the test of centuries, and by their results continue to proclaim their excellence. All parties are united in opinion that Hindu married life is an exceptionally happy state. No "reformer," however hysterical, has ever ventured to assert that Hindu marriages are other than happy; and this is the clearest proof of the excellence of the system, and the severest condemnation of those who are seeking to unsettle it.

"Contrast this sober-minded process with the haphazard and objectionable customs of England. It is notorious that an English girl decorates herself, and practises arts and witcheries, in order to attract notice. She does this at a time of life when fully conscious of what she is doing; and she is compelled by custom to forfeit more or less of her natural reserve and restraint in order to secure a husband. The process, as is well known, is favoured by parents who spend their efforts in placing their daughters where young men are likely to be caught. I need not pursue the details; the whole process is too well known to be dwelt on. Nothing but education and association could reconcile a civilised race to such customs which end in the union of two people who have to learn after marriage to adapt themselves to each other, at a time of life when the habits have become settled.

"The unpromising prelude to an English marriage is too often confirmed by its after-effects. The frivolous tone of mind produced by the process of winning a husband develops into a relish for love-making, and women, in too many cases, hanker for a continuance of the excitement and pleasure—a hankering which often ends in the Divorce Court. Will any one dare to say that I am giving an untrue, or even an exaggerated account of the so-called marriage "system" of this country? Our novelists do not draw on their imagination when they make these practices the constant theme of their tales. I am merely stating what is simply notorious, what everybody's common experience will corroborate, what is the standing jest of our comic journals, and the melancholy record of our daily newspapers. These are the habits which we are asking the Hindus to accept in place of their own modest and well-ordered system. While such practices obtain, as those in vogue here, the Divorce Court must continue busy, conjugal happiness must remain an exceptional occurrence, and the spirit of unrest and disposition to criticise fostered by self choice must continue to render marriage a hazardous enterprise. No Hindu will ever dream of abandoning the infant-marriage ceremony with the dispassionate sobriety and sacred responsibility of parental choice, when he knows that its abandonment will entail all the incidents of courtship and the attendant evils to which I have only alluded.

"Another accusation of "reformers" is that Hindu women are degraded by the marriage laws of their country. How is such an accusation reconcilable with the universal testimony of people familiar with Indian life, that Hindu women are conspicuous for their gentleness and modesty, domesticity and lovable characteristics. The pushing freedom of many English girls is unknown in India; you never find Indian women thrusting themselves into dubious social questions. No one in India ever saw women elbowing their way through men, in a struggle for notoriety and self-assertion. Judged by results, the English practices stand condemned, for they have really degraded women; while the Hindu system has preserved all that is womanly, unselfish, and pure. Whether we look high or low, we see that woman has lost her balance in England; she is no longer the helpmate and friend of man, she is rather his rival, if not his antagonist. India is still entirely free from this evil state, because the infant marriage ceremony secures for every girl there (methodically and modestly) a husband to protect and provide for her. She has (without practising wiles) at least one chance in life, of which nothing but the accident of death can deprive her. An early marriage ceremony necessarily involves the chance of early husband-death; but even that accident has been carefully provided for by the Hindu law-givers, so that no Hindu girl need pass her life without the affectionate cares of maternity. (*Manu*, ix, 59, 60, 69, 70).

"It is not pleasing to contrast the Indian basis of all the present excitement with the state of things in England. In the country we are seeking to "reform" only two cases of improper action towards girls have been brought to light, in a period of twenty-eight years, among a population of two hundred millions and upwards. Other cases have been imagined in consequence of these two known instances: but it is extremely doubtful whether any great number of such cases could have occurred without detection for physiological reasons. Contrast this almost pure record with Mr. Mc. Laren's Parliamentary Returns for eleven of the principal towns in England, containing about twelve million inhabitants. In the Return we find, in 1889 alone, no less than 26 cases of criminal action towards girls under thirteen occurring in those places. Nor is this the worst; for there were also 64 convictions for assault with intent to ravish, 45 of which occurred in London, the centre of enlightenment. Two cases in 28 years in the whole continent of India against 90 cases in one year in a portion of England! Do these figures combined with those of the Divorce Court, assist us to preach morality to the Hindus?

"There are no words strong enough to express the general danger and degradation of the manners of mob courtship, which have become the fashion, almost the law, in modern times, when in a miserable confusion of candle light, moonlight, and limelight—and anything but daylight—in indecently attractive and insanely expensive dresses, in snatched moments, in hidden corners, in accidental impulses and dismal ignorances, young people smirk and ogle and whisper and whimper and sneak and stumble and flutter and fumble and blunder into what they call love, expect to get whatever they like the moment they fancy it, and are continually in danger of losing all the honour of life for a folly and all the joy of it by an accident."

By

FREDERICK PINCOTT

—*The Federated India.*



# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[176-வது பக்கத் தொடர்ச்சி]

### தங்கையின் சொற்களே தந்தவோ ருருவம்.

தெருள்தரு கேள்வியின் ஒளியின்றி அருள்தீர்ந்த நெஞ்சினுங் கரிய இருளிற் காற்றுதுளைந்த இராவணன்,

விள்ளா துசெறிந் திடைமேலுற வோங்கி யெங்கு
நள்ளா திருளந் தகன்ஞாலம் விழுங்க லோடும்
எள்ளா துலகியா வையும்யாவரும் வீயு மென்ட[ றான்
துள்ளா துமிழ்ந்தான் விடமுண்டவொருத்த னென்

[இருளாகிய எமன், பிரிக்கப்படாமல் எங்கும் அடர்ந்து மேல்நோக்கி வளர்ந்து, ஓரிடத்திலும் அன்புவைக்காமல் உலகம் முழுவதையும் விழுங்கிய வளவிலே - முன்னுள் விஷத்தைக் குடித்த சிவபிரான், இது அழகு அன்று என்று இகழாமலும், உலகத்திலுள்ள சராசரங்கள் எல்லாம் அழியும் என்பதைக் கருதாமலும், அவ்விஷத்தை இப்பொழுது உமிழ்ந்துவிட்டான்—என்றான்]

ஆயினும், அன்றப் பாற்கடற் கரையினின்றமரருய்யுமா றுண்டநஞ்சினைத் தன்நெஞ்சினின்று ஆருயிரனைத்தும் அழியவின் றுமிழமாட்டானென மதிப்பதின்றியே பிஞ்ஞகற்கோர் பிழைசெய்த இவ்வடலரக்கன், அப்பிஞ்ஞகன் பருகிய ஆலத்திற்கு மொரு இழிவினைக் கூறுவானாகி,

வேலைத் தலைவந் தொருவன் வலியால் விழுங்கு
மாலத் தினடங் குவதன்றி தறிந்து ணர்ந்தேன்
ஞாலத் தொடுவிண் யாவையு நாவி னக்கும்
காலக் கனல்கார் விடமுண்டு கறுத்த தன்றே.

[இந்த இருளானது, பாற்கடலில் தோன்றி, சிவபிரான் ஒருவனது ஆற்றலால் விழுங்கப்பட்ட அந்த விஷத்தின் இனத்தைச் சேர்ந்தது அன்று. (ஏனெனில் அது ஒருவன் விழுங்கிவிடக்கூடியதாய் அமைந்த குறைந்த வேகத்தையே யுடையது, இதுவோ எல்லாவற்றையும் தான் விழுங்கி நிற்கின்றது, ஆகையால்) இவ்வுலகத்தோடு ஆகாயம் முதலிய எல்லாவற்றையும் தன் நாவினால் நக்கி அழிக்கவல்ல ஊழித்தீயானது கரிய விஷத்தைக் குடித்து அதனால் கருநிறமடைந்ததாகும் இவ்விருள், என்பதை நன்றாக ஆராய்ந்து தெரிந்துகொண்டுவிட்டேன்]

என்று முன்னர்க் கூறியதை மறுத்துவிட்டனன். இராவணனுக்கிவ்விருள் விடமும் கனலும், விடமுண்டகனலுமாய் விளைந்து தோன்ற, பண்டைநாள் இச்சீதையின் பொருட்டே விரகநோய் கொண்ட இராகவன்,

கழியா வுயிருந் தியகா ரிகைதன்
விழிபோ லவளர்ந் ததுவீ கிலதால்

[என்னுடைய உயிராகிய யாழினை, இசைக்கும் கழி போன்ற அக்காரிகையின் விழியைப்போல், குறைவின்றிக் கறுத்து வளர்கின்றது]

என்று இருளினைக் குறித்துரைத்ததும், அவ்வாறே சீதையும், "அவர்தம் நீலநிறத்தை யெல்லோரும் நினைக்க அதுவாய் நிரம்பியதோ இவ்விருள்" என வியந்ததும், இவ்வயின் ஒப்புநோக்க உவகைதரும்.

இருளின் திறம் இவ்வண்ணமாக அதனிடைச் சீதையின் உருவெளித்தோற்றம் இராவணனுக் குண்டாவதைக் கம்பர் இனிச் செப்பலுறுகின்றார்:—

அம்பு மனலு நுழையாக்கன வந்த காரத்
தும்பர் மழைகொண் டயலொப்பரி தாய துப்பின்
கொம்பர் குரும்பைக் குலங்கொண்டது திங்கடாங்கி
வெம்புந்தமியேன் முன்விளக்கெனத்தோன் றுமன்றே

[நீரும் நெருப்பும் நுழையமாட்டாமல் திணிந்த இவ்விருளில் காமத்தால் வெம்புகின்ற என் எதிரே, வேறு ஒப்பில்லாத ஒரு பவளக்கொடியானது, விண்ணிலிருக்கும் மேகத்தை எந்தி, தென்னம் குரும்பைகள் இரண்டு கொண்டு, சந்திரனைத் தாங்கி, விளக்குப்போல் தோன்றுகின்றதே]

என இராவணன் தன்முன் தோன்று முருவத்தை உருவகப்படுத்துகின்றான். இன்னதோர் உருவத்தைக் கண்டு,

மருளு டுவந்த மயக்கோமதி மற்று முண்டோ
தெருளாதிதென்னோ திணிமையிழைத் தாலுமொவ்
இருளு டிருகுண் டலங்கொண்டிருண்ட நீலச் [வா
சுருளோடும் வந்தோர் சுடர்மாமதி தோன்று மன்றே.

[காமத்தால் எனக்கு வந்த மயக்கந்தானோ, அல்லது இத்தகைய சந்திரந்தான் வேறொன்று உளதோ! தெளிந்துகொள்ளமுடியாத இவ்வுருவம் எதுவோ! அடர்ந்த மையைக் குழைத்தாலும் ஒப்பாகமாட்டாத இவ்விருளிலே, ஒளிபொருந்திய ஒரு சந்திரன் இரண்டு குண்டலங்களை அணிந்துகொண்டும், கறுத்த கூந்தலோடும் வந்து தோன்றுகின்றதே]

என ஐயவணியும் இல்பொருளுவமமும் இணைந்ததோர் உருவகமாய் வியந்துரைக்கு மளவில் அவ்வுருவம் பின்னும்பல உறுப்புக்களைப்பெற்றுத் திரளவே,

புடைகொண்டெழுகொங்கையுமல்குலும்புல்கிநிற்கு
மிடைகண் டிலமல் லதெல்வா வுருவுந் தெரிந்தாம்
விடநுங் கியகண் ணுடையாரிவர் மெல்ல மெல்ல
மடமங் கையரா யென்மனத்தவ ராயி னாரே.

[பக்கங்களில் பூரித்துவளர்கின்ற முலைகளையும் அல்குலையும் பிணைத்துநிற்கவேண்டிய இடுப்பை மாத்திரம் காணவில்லையே யொழிய மற்ற அவயவங்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கண்டுகொண்டேன். விஷத்தை உட்கொண்டிருக்கின்ற கண்ணுடையார் இவர் மெல்லமெல்ல ஒரு இளம் மங்கையாகி என் மனத்திலுள்ளவ ரானார்]

எனமொழிகின்றனன். இடையினை எங்ஙனம் காண்பான் இவ்விராவணன்? மருங்கிலா நங்கையேயவளாதல் கிடக்க, "பல்லியல் நெறியிற் பார்க்கும் பரம்பொருள் என்ன யார்க்கும் இல்லையுண் டென்ன நின்ற" சீதையின் மருங்குல் இப்பொய்ந்நின்ற நெஞ்சினனுக்கு என்றும் காணுத காட்சியேயாகும். கொங்கையும் அல்குலும் புல்கும் இடையினைக் கண்டிலன் இராவணன் என்றுரைக்கு மிது,

கணங்கெழு கலாவமொளி காலுமக லல்குற்
சுணங்கெழு தடத்துணை முலைச்சுமை யிடத்தாய்
வணங்கியு நுணங்கியும் வருந்திய மருங்கிற்
கிணங்குது ணையாய்ஞிமி றிரங்கின வெழுந்தே.

[கூட்டமாய் நிறைந்த மேகலையின் ஒளி வீசப்பெற்ற அகன்ற அல்குலுக்கும், தேமல் படர்ந்த பெரிய பாரமாகிய இரண்டு முலைகளுக்கும் நடுவாகி, வளைந்தும் துவண்டும் வருந்திய இடையினிற்கு இணங்கிய நட்புடையனவாய் வண்டுகள் எழுந்து இரங்கின]

எனவரும் அவ்வழகிய சூளாமணிச் செய்யுளை நம் நினைவிற்கு இங்குக் கொணர்ந்து தருகின்றது. தோலாமொழித் தேவர் தீட்டிய அம் மடவார்தம் சித்திரத்தைச் சிறிது திருத்தி யமைத்துக்கொள்வார் போல், "அவ்விடையைக் கண்டிலேன்" என இங்கு இராவணனைக் கம்பர் இயம்பவைத்தனர். மருங்கிற் கிணங்குந் துணையாய் ஞிமிறு இரங்குகின்ற செய்தியையும் கம்பர் மறக்காமல் ஏற்றுக்கொண்டனர் என்பது, முன் மிதிலைக்காட்சிப் படலத்தில், "பூசலின் எழுந்தவண்டு மருங்கினிற் கிரங்கிப் பொங்க" என வரும் பாசுரத்தால் உணரப்பெறும்.

தன் இருபது கண்களால் இவ்வண்ணம் இடையன்றி மற்றெல்லா வுருவுந் தெரியக்கண்ட இராவணன் சிறிது சிந்தித்து அதன் பயனாய்,

பண்டே யுலகே ழினுமுள்ள
படைக்க ணாரைக்
கண்டே னிவர்போல் வதொர்பெண்ணுருக்
கண்டி லேனு
ஞண்டே யெனின்வே றினி யெங்கை
யுணர்த்தி நின்ற
வண்டே றகோதை மடவாரிவ
ராகு மன்றே

[முன்னமே நான் இவ்வேழுலகங்களிலுமுள்ள வாள் போன்ற கண்களுடைய மாதர்கள் அனைவரையும் பார்த்திருக்கின்றேன். ஆயினும், இவர்போன்றவொரு பெண்வடிவத்தைக் கண்டதில்லை. அவ்வாறு யான் கண்டிராதவொரு பெண்ணுரு இது இங்குக் காண நிற்கின்றதே யென்னின், என் தங்கையான சூர்ப்பணகை எனக்குத் தெரிவித்த வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய அப்பெண்தான் இவர் ஆதல் வேண்டும்]

என்று துணிந்தான். இத்துணிவும் அதற்குரிய காரணமும் தக்கவே. எதிர்மறை முகத்தால்,

தெவ்வுல கத்துங் காண்டி
சிரத்தினிற் பணத்தி னோர்க
ளவ்வுல கத்துங் காண்டி
யலைகட லுலகிற் காண்டி
வெவ்வுலை யுற்ற வேலை
வாளினை வென்ற கண்ணு
ளிவ்வுல கத்தா ளங்கம்
யாவர்க்கு மெழுதொ ணுதாள்.

என்று முன் சூர்ப்பணகை செப்பிய இலக்கணத்தை மனத்திற்கொண்டே இராவணன் இங்கித் துணிவு எய்துகின்றானென்பதற்கையமில்லை. "வாளினைவென்றகண்ணுள்' என்றவள் அங்குக் கூறிய மொழிகளே, இங்கு இவனுக்குப் "படைக்கணார்" என்னுமிக் குறிப்பினை உணர்த்தித் தந்தன. இராவணன்கண்ட உருவெளித்தோற்றமும் சூர்ப்பணகை வனைந்த சொற்களும் இணைவது இவ்வொரு திறத்தில்மாத்திரமேயன்று. சீதையின் வடிவமாக இராவணன் கண்டன வனைத்தும் பெரும்பான்மை அவன் தங்கையின் சொற்களைக் கடவாமலே விளைந்திருக்கின்றன. திரண்ட கொங்கைகளோடு கூடிய தேர்தந்த அல்குற் சீதை என்றாளவள், இவன் புடைகொண்டெழும் கொங்கையும் அல்குலுங் கண்டான். "மழையொக்கும் வடித்த கூந்தல்" என்றாளவள், இவன் மழைகொண்டவோர் உருவத்தைக் கண்டான். 'பவளத்தின் விரல்கள்' என்றாளவளெனின் இவன் ஒப்பரியவோர் துப்பின் கொம்பினையே கண்டனன். 'தேன் கொண்டோடுங் கூந்தல்' என்று அவள் உரைத்ததற்கேற்க இவன் வண்டேறு கோதை மடவாரைக் கண்டான். அவள் உரைத்த மின்னைவென்ற நுண்ணிடையை, பொய்ந்நின்ற நெஞ்சினன் இவன் ஆதலின், அவ்விடை பரம்பொருள் போன்றதென்றதற் கிணங்க, கண்டிலன், அஃதொன்றே குறை. நுதலையும் பல்லையும் இதழையும் விழியையும் தோளையும் அவள் வருணித்துச் சொல்லமாட்டாதவளாயினதற் கிணங்க இவனும் இங்குத் தனித்தனி உணர்ந்துரைக்க மாட்டாதவனுயினுன். இன்னணம் சூர்ப்பணகை முன் உவமையாற் சித்தரித்த சிற்சில பாகங்களல்லால் வேறு இராவணன் உள்ளத்தில் உறைவதற்கில்லையாதலால், அதனைக் கடந்தவோர் தோற்றமும் இவன் காணப்பெற்றிலன். ஆதலின், உருப்பெற்றெழுந்த மடமங்கை பிறகு தன் மனத்தவராயினர் என்பதனினும், தன் மனத்தவரே மெல்லமெல்ல ஓர் மடமங்கையாயினர், என மாற்றிக்கொள்வதே கம்பர்தம் நாடகத்திறமைக்குச் சாலப்பொருத்தமுடையதாகும். அவன் மனத்தவளே இம் மடமங்கை யாயினுளென்பதை நாமறிவோம்; மற்று, இராவணனே, மடமங்கையர் ஆகிப் பின் தன் மனத்தவராயினுள் என்று மாறி மயங்கியது இயற்கையே. இவ்விரண்டு பொருளும் ஏற்கும்படி கம்பர், "மடமங்கையாய் என் மனத்தவர் ஆயினர்" என இரட்டுறமொழிந்தனர்.

எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவேர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ



# தமிழ்ப் பாடம் 61.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[185-வது பக்கத் தொடர்ச்சி]

**த**மயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் நடைபெறும் என்று அந்தணன் கூறியதைக் கேட்டு, அஃது உண்மைதான் என்று நம்பி மறுநாள் நடக்கும் அச்சுயம்வரத்திற்குத் தான் எவ்வாறு போய்ச் சேர்வதென்று தவித்த இருதுபன்னனை நோக்கி வாகுகன், "ஏ, அரசே, சொல்லப்படுமோ இச்சொல்!" என்று வாய்பொத்துகின்றனன். அவ் வயோத்திமன்னவன் இயற்கையிலேயே சிறிது புத்திநுட்பங் குறைந்தவனுயிருத்தல்வேண்டும். மதி குறைந்தவனுயிருந்ததுமல்லாமல், அவ்விஷயம் உலகப் பரசித்தமாகவும் இருந்திருத்தல்வேண்டும். ஆதலாற்றான், முன்சொன்னபடி தனக்கு இரண்டாம் சுயம்வரம் என்றாலும் அவன் சிறிதேனும் ஆராயாது வந்திடுவான் என்று தமயந்தி நிச்சயமாய் உணர்ந்து அதன்மேல் தன் சூழ்ச்சிகளைக் கட்டலாயினுள். அவள் எண்ணியவாறே இவனும் "மற்றிதனுக்கு என் செய்கோ!" என்று பதறினுன். ஆயினும், வாகுகனுப் அருகுநின்ற பாகனே, இஃது அசம்பாவிதம் என்பதை விளக்குகின்றனன். அதன் மேலேனும் அயோத்திமன்னன் ஆராயப் புகுந்திருக்கலாம். அவ்வந்தணனை, "வேதிய, இரண்டாம் சுயம்வரம் என்னுமிது சாஸ்திர சம்மதந்தானே! பிரிந்தகன்ற நளன் யாது ஆயினுன் என்னுஞ் செய்தி ஏதேனும் தெரியவந்ததுண்டோ? இச்சுயம்வரம் ஆயபின் அவன் திரும்பிவந்தால் தமயந்தியின் நிலையும் அவள் இரண்டாம் மாலையிட்ட வேந்தனது நிலையும் என்னவாம்! மற்று, விதர்ப்பவேந்தன் முடங்கல் ஏதேனும் எனக்கு நின்வயம் அனுப்பியுளனே?" என்று வினவியிருப்பானுயின், உண்மையை ஒருவாறு உணர்ந்திருக்காலம். அதற்குமாறாக இம்மையலால் மருண்ட மன்னன் என் செய்தான்? வாகுகனுக்குச் சமாதானஞ் சொல்லப் புகுந்தான்.

---

என்மே லெறிகின்ற மாலை யெழினளன்றன்
முன்னே விழுந்ததுகாண் முன்னாளி—லன்னதற்குக்
காரணந்தா னீதன்றோ வென்றான் கடாஞ்சொரியும்
வாரணந்தா னன்னான் மதித்து.

பதப்பிரிவு:—என்மேல் எறிகின்ற மாலை எழில் நளன்தன் முன்னே விழுந்தது காண் முன் நாளில் அன்னதற்கு காரணம்தான் ஈது அன்றோ என்றான் கடாம் சொரியும் வாரணம்தான் அன்னான் மதித்து.

பதவுரை

கடாம் - மதநீர்
சொரியும் - பொழிகின்ற
வாரணம்தான் - யானையையே
அன்னான் - ஒத்தவனாகிய இருதுபன்னன்,
மதித்து - நன்றாக யோசித்து,
"முன் - (முதல் சுயம்வரம் நடந்த) முன்
நாளில் - நாளிலே (தமயந்தியானவள்)
என்மேல் - என்மேலே
எறிகின்ற - எறிவதற்கு வந்த
மாலை - மாலையானது
எழில் - அழகிய
நளன்தன் - நளனுக்கு
முன்னே - எதிரே
விழுந்ததுகாண் - விழுந்துவிட்டது பார்.
அன்னதற்கு - அப்படிவிழுந்ததற்கு
காரணம்தான் - காரணந்தான்
ஈது - இந்த இரண்டாம் சுயம்வரம்
அன்றோ - அன்றோ!"
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—இருதுபர்னனைப் "பறிபீறி நெல்லில் பருவரால் ஓடும் நெடுநாடா" என்று வாகுகன் அழைத்ததற்கு இணையாக இங்குப் புகழேந்தி, "கடாம் சொரியும் வாரணம்தான் அன்னான்" எனப்பொருத்தமுறக் கூறினர். இவ்வுன்மத்தன் என்ன சொல்கின்றானென்பது விளங்கவில்லை. சுயம்வரத்தில் மாலையைச் சூட்டுவோர்களே யன்றி ஒருவரும் எறியமாட்டார். தமயந்தி அப்படிஇவ்விருதுபன்னனைக்குறிவைத்துச் சுயம்வரமாலையை எறிந்ததாகவும், அந்தக்குறி தவறி நளனுக்கு எதிரேபோய் அம்மாலை விழுந்ததாகவும் இம் மயங்கிய மதியினன் ஏதோ இயம்புகின்றான். இயம்பியபின், "அன்னதற்குக் காரணம் இது" என்பது பொருள்மாறாட்டமுடையது. இப்பொழுது இரண்டாம் சுயம்வரம் வைப்பதற்குக் காரணம் முன்நாள் மாலைதவறிவிழுந்ததே, என்று சொல்லநினைக்கின்ற அயோத்திமன்னன், "இன்னதற்குக் காரணந்தான் அஃதன்றோ" என்று கூறியிருத்தல்வேண்டும். அதனைவிடுத் திவன் இவ்விரண்டாம்சுயம்வரத்தைக் காரணமாகவும் முதல் சுயம்வரத்தில் எறிந்தமாலை தவறிவிழுந்ததைக் காரியமாகவும் பிறழ்ந்து கூறுகின்றான்.

விதியின் குறும்பு சிற்சில சமயங்களில் மிகவுங்குரூரமாய் முடிகின்றது. அழகு செல்வம் குலம் முதலிய நலங்களில் தனக் கிணையாய வேந்தர் யாருமிலர் என்னுமோர் இறுமாப்பு இருதுபன்னனுக்கு இருந்திருக்கும். முன்நாள் தமயந்தி தன்மேல் எம்மாலையும் எறிய வந்ததில்லை என்பதும், இன்று வைத்த இவ்விரண்டாம் சுயம்வரம் தன்னையேகுறித்து வைத்ததன்று என்பதும் இருதுபன்னனுக்குத் தெரியாதவைகளல்ல. ஆயினும், தன்னைவிட்டு வேறு யாருக்கும் இந்தத் தமயந்தி இனி மாலையிடமாட்டாள் என நிச்சயஞ் செய்துகொண்டான். ஆதலால், 'இந்தத் தேர்ப்பாகனிடத்தில் என்ன சொன்னால் என்ன?' என்ற துணிவினால் பெரியதொருபொய்யைக் கூசாது சொல்பவனுயினன். அந்தப் பொய்யோ நளனிடத்திலேயே சொல்வதாக முடிந்தது. பிறகு இவன் அந்நளனே என்பது தெரியவந்ததும் மானமற்று அவன் முகத்தை மறுபடி இருதுபன்னன் எவ்வாறு பார்ப்பானே! இந்தப் பொய் வெளியானபின் தானே தன்னைத் தூக்கிலிட்டுக்கொள்வதே தக்கது என்று அவனுக்குத் தோன்றுதல் வேண்டும்.

எனினும், அயோத்திமன்னன் நெஞ்சால் நினைத்து இந்தப்படியும் பொய் சொல்வானே! தன் பாகனுக்கு அவன் ஒரு காரணத்தைக் காட்டித்தான் தேரைப் பூட்டும்படி சொல்லவேண்டுமென்ற கட்டாயம் இல்லையே! ஒருகால், முன் சுயம்வரத்தில் இவ்விருதுபன்ன மன்னன் நளனுக்கு அயலே ஆதனம் அமர்ந்திருக்க

லாம். அந் நளன் தமயந்தியின் கடைக்கண் பார்வையைப் பன்முறை கவர்ந்திருப்பான். ஜார்ஜ் எலியட் என்னும் ஆங்கில நாவலாசிரியர் சொல்லும் வண்ணம், பிறர்பால்போக்கிய காதற்சாடைகளைத்தனக்கென்றே எண்ணுகின்ற மாந்தர்களுள் இருதுபன்னன் ஒருவன் போலும். (Like many another man he thought signs of love for another were signs of love towards himself.) ஆதலின், இவ் வசட்டுவேந்தன் தான் சொல்லியதே உண்மையென்று ஒருவேளை நம்பியிருந்தாலும் இருக்கலாம். எவ்வாறாயினும், ஓராது இவ்வுரை இங்குப் பகர்ந்ததால் அவன் தன் மானத்தை அடியோடு உகுத்துவிட்டான் என்பதுமாத்திரம் நிச்சயம்.

---

முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ—தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது. 42.

பதப்பிரிவு:-முன்னை வினையால் முடிந்ததோ மொய் குழலாள் என்னைத்தான் காண இசைந்ததோ தன் மரபுக்கு ஒவ்வாத வார்த்தை உலகத்து உரைப்பட்டது எவ்வாறு கொல்லோ இது.

பதவுரை

"முன்னை - பண்டைய
வினையால் - கருமத்தினால்
முடிந்ததோ - (இப்படிச் சொல்லுவதும்) சம்பவித்ததோ ! (அல்லது)
மொய் - அடர்ந்த
குழலாள் - கூந்தலையுடைய தமயந்தி
என்னைத்தான் - என்னை
காண - பார்ப்பதற்கு
இசைந்ததோ - எண்ணியதினாலேயோ !
தன் - (இல்லையேல்) தன்னுடைய
மரபுக்கு - குலத்துக்கு
ஒவ்வாத - பொருந்தாத
வார்த்தை - இரண்டாம் சுயம்வரம் என்னும் வார்த்தையாகிய
இது - இந்தச் சொல்
உலகத்து - இவ்வுலகத்தில்
உரைப்பட்டது - வழங்குவதானது
எவ்வாறுகொல்லோ - வேறு எவ்வகையால் விளைந்ததோ."

என்று நளன் ஒருபுறமாகச் சென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

விரிவுரை:-தமயந்தி இரண்டாம் சுயம்வரம் நாட்டியுள்ளாள் என்பதை நளன் அரைநொடிப்பொழுது கூட நிசமென்று நம்பி நினைக்கவில்லை. இப்படி ஓர் அபவாதம் உலகத்தில் ஏற்பட்டதற்குக் காரணம் எதுவாயிருக்கும் என்று சிந்திக்கின்றானே யல்லாமல் அவள் இரண்டாம் சுயம்வரம் நாட்டினளென்று எண்ணி அதற்குக் காரணம் யாதென்று இவன் ஆராயப்புகுந்தானென்று கருதலாகாது. "உலகத்து இஃது உரைப்பட்டது எவ்வாறு கொல்லோ" என்றுதான் அயிர்க்கின்றான். பண்டை வினையின் வலியில் நளன் முழு நம்பிக்கை உடையவன் ஆகையால், இந்த விபரீதச்சொல் வழங்கநேர்ந்தது பண்டைவினையின்செயல் என முதலில் மதிக்கின்றான்; பிறகு தன் மனைவியின் திப்பிய குண நலங்களோடு அவளது மதிநுட்பத்தையும் அறிந்தவனாகையால், "என்னைத்தான் காண இசைந்ததோ" என்று உண்மையை ஊகித்துவிட்டான்.

---

ஒற்றைத் தனியாழித் தேரென்ன வோடுவதோர்
கொற்றநெடுந்தேர் கொடுவந்தேன்-மற்றிதற்கே [லத்
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுர
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய். 43.

பதப்பிரிவு:-ஒற்றை தனி ஆழி தேர் என்ன ஓடுவது ஓர் கொற்றம் நெடுமை தேர் கொடு வந்தேன் மற்று இதற்கே போந்து ஏறுக என்று உரைத்தான் பொம் என்று அளி முரல தீம் தேறல் வாக்கும் தார் சேய்.

பதவுரை

பொம் என்று - பொம்மென்ற ஒலியோடு
அளி - வண்டுகள்
முரல - சப்திக்க
தீம் - மதுரமான
தேறல் - தேனை
வாக்கும் - சொரிகின்ற
தார் - மாலையை யணிந்த
சேய் - (முருகனைப்போன்ற) நளன்,
"ஒற்றை - ஒன்றாகிய
ஆழி - சக்கரத்தையுடைய
தனி - ஒப்பற்ற
தேர் - சூரியனது தேர்
என்ன - என்று சொல்லத் தகுந்ததாய்
ஓடுவது - ஓடக்கூடிய
ஓர் - ஒரு
கொற்றம் - வெற்றியுடைய
தேர் - தேரினை
கொடு - கொண்டு
வந்தேன் - வந்திருக்கின்றேன்.
போந்து - நீ வந்து
இதற்கு - இதனில்
ஏறுக - ஏறுவாயாக".
என்று - என்று
உரைத்தான் - (இருதுபன்னனுக்கு நளன்) சொன்னான்.

விரிவுரை:-எது எவ்வாறாயினும், வாகுகனாயிருந்த நளன் தன் கடமையைச் செய்யவேண்டியபடி செய்யத் துவக்கி வஞ்சனை புரியாமல் விரைவிற் செல்லவல்ல ஓர் தேரினைக் கொணர்ந்து நிறுத்தினான்.

---

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையும் குற்[illegible]யும். ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் [illegible]



# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[192-வது பக்கத் தொடர்ச்சி]

இனிப் "பிறமேற் றொடரவும் பெறுமே" எனச் சமட்டியில் பவணந்தி நமக்குக் காட்டி விளக்காது விட்ட வேறுவகைக் குற்றுகரங்களை நோக்குவோம்:-

"மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினும், எழுத்தியல் திரியா" என்னும் விதியைக் கடைப்பிடித்துக் குற்றெழுத்தாகிய உகரத்தின் பிறப்பிலைக் காண்போமாகில் "உகரம்...இதழ்குவிந்தியலும்" என்பார். இதழ் குவித்துக் கூறுமிடத்து அவ்வுகரம் குற்றியலுகர மாகாது. வல்லெழுத் தூர்ந்துவரினும் சரி, வேறுவகை வரினும் சரி, அதனை முற்றியலுகரமென்றே கொள்ளல்வேண்டும். வேறுவகை யென்றது பின்வரும் சூத்திரம் விளக்குவது:—

"குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி
னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும்" *
தொல் - மொழிமரபு 34.

எனவே, முன்னிலை முறைப்பெயரிடத்து (ஒற்றிய) தனிமெய்யாய் நின்ற நகரமெய்யின்மேல் நின்று, அந்நகரத்தோடு கூடி மொழிக்கு முதலாகும் உகரம் என்பார். உதாரணம் நுந்தை. இது இதழ் குவியாது கூறிய தென்றுணர்க. † இதில் 'நு' என்பதின் உகரம் குற்றிய லுகரமாம் ‡. மெல்லெழுத்தாகிய நகரத்தை யூர்ந்து வரினும், உகரம் குறுகுவது காண்க. ஆகையால் உகரம் குறுகுவதும், குறுகாதிருப்பதும், முறையே இதழ் (Lips) குவியாதிசைத்தலானும், இதழ் குவிந்திசைத்தாலானும் உண்டாவன. இசைக்கேற்றவாறே அமைவனவாகையால், அவ்வாறு உகரம் குறுகுதலும், குறுகாமையும், பொருள் வேறுபாடுண்டாக்குவதில்லை. இதற்கு விதி

"முற்றிய லுகரமொடு பொருள் வேறுபடாஅ
தப்பெயர் மருங்கி னிலையிய லான" என்பதாம்.
தொல் - மொழிமரபு 35.

ஏன் இவ்வாறு முன்னிலை முறைப்பெயரில் நகரத்தின்மேல் ஏறிவரும் உகரம் அஃகும், என்பதை நாம் ஆராயின்,—"முன்னிலைமொழிக்கே", உகரத்தையும், ஒளகாரத்தையும் ஞ, ந, ம, வ என்னும் புள்ளியீற்றுச் சொற்களில் உள்ள ஈற்றோசையையும் கிரஹித்து விழுங்கும் குணம் இசையில் உண்டாதலால் இத்தகைய பண்பு "நுந்தை"யின் உகரம் பெறுவது இயல்பன்றோ? மேற்கண்ட மெய்களின்மேல் ஊர்ந்துவரும் உகரம் முற்றியலுகரத் தியல்பினின்று உறழப் பெறுவதுண்டு.

"ஒளவென வருஉ முயிரிறு சொல்லும்
ஞநமவ வென்னும் புள்ளி யிறுதியுங்
குற்றிய லுகரத் திறுதியு முளப்பட
முற்றத் தோன்று முன்னிலை மொழிக்கே"
தொல் - தொகை மரபு 10.

என்னும் சூத்திரத்தைக்காண்க. இதற்கு உதாரணம், கௌவு கொற்றா கௌவுக்கொற்றா; உரிஞுகொற்றா உரிஞுக்கொற்றா; பொருநு கொற்றா பொருநுக்கொற்றா; திருமுகொற்றா திருமுக்கொற்றா; தெவ்வு கொற்றா தெவ்வுக்கொற்றா; கூட்டுகொற்றா கூட்டுக்கொற்றா என்பனவற்றை உரையாசிரியர் காட்டுகின்றார். இவ்வாறு காட்டிய உதாரணங்களின் இனிமை, பண்ணமைந்த பாடலிற் கண்டாலன்றி மாணவர்க்கு விளங்காது. ஆதலால் அப்பர் தேவாரத்தில் இத்தகையவுறழ்ச்சி முன்னிலைமொழிக்கு முன்னர் நேர்வதை அலகிட்டுக் காண்போம்:—

நீடு நெஞ்சு ணினைந்துகண் ணீர்மல்கும்
ஓடு மாலினொ டொண்கொடி மாதராள்
மாட நீண்மரு கற்பெரு மான்வரில்
கூடுநீ யென்று கூடலி ழைக்குமே.
திருமருகல் - திருக்குறுந்தொகை.

இப்பாசுரத்தில் 'கூடு - நீயென்று' அலகிடுவது பொருளின் நயத்திற்கு அத்துணைப் பொருந்தாமையால் 'கூடுநீ' என்று அலகிடுங்கால், இக் குற்றியலுகர வுறழ்ச்சி நன்கு விளங்கும். எனவே, குற்றியலுகரமானது சாதாரணமாய் வன்மையூர் உகரமாயினும், இசையில் வேறு இனத்தில் வரலாகும். உகரத்தின் ஓசை அஃகும் காலை அதைக் குற்றியலுகர மென்னல் வேண்டுமன்றி * வசனமாய் வழங்கப்படு மிடங்களில் ஒன்றினைக் குற்றியலுகர மென்று வற்புறுத்துதல் மிகவும் அசாத்தியமான காரியம். சார்பொலியாதலால், தனக்கென்னும் தனிச் சுதந்தரவொலி அதற்கு இன்மையால் சந்தியில் பிறவுயிருடன் கலக்குந்தன்மை பெறுவதன்றித் தனியே † கெடுகின்ற தன்மை யதற்கில்லை. கெடும் உகரமெல்லாம் இசையில் முற்றுகரமே யென்று உணரல் வேண்டும். அத்தகைய உகரங்களைப் பற்றித் தொல்காப்பியனார், பல விதிகளில் விளக்குகின்றார். அவற்றில் முக்கியமானது உருபியலில் 4-ம் சூத்திரமாகிய

"சுட்டுமுத லுகரம் அன்னொடு சிவணி
யொட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே"
தொல் - உருபியல் 4.

என்பதாகும். இதன் நச்சினார்க்கினியர் உரையையும் நோக்குக. இச்சூத்திரத்துடன்

"குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை"
தொல் - உருபியல் 23.

என்பதை ஒத்து நோக்குக. ஆதலால் குற்றியலுகரத்தை எழுத்தியல் வகையில் உகரமாய்க் கொண்டாலும், இலக்கண வகையில் சார்பொலியெனக் கவனிப்பதுடன், ஆசிரியர் தொல்காப்பியனார் அதற்குத் தக்கவாறு கூறும் இலக்கண வரம்பையும் மாணவர் கவனிப்பாராக.

---

* நச்சினார்க்கினியர் உரை—"இதனானே முறைப்பெயர் இடமும் நகரம் பற்றுக்கோடுமாயிற்று. ஈண்டுக் குற்றியலுகரம் மெய்ப்பின்னர் நின்றதேனும் ஒற்றுமை நயத்தான் மொழிக்கு முதலென்றார். இது செய்யுளியலை நோக்கிக் கூறியதாயிற்று"

† இதழ் குவித்துக் கூறின் நுந்தையின் நுகரம் முற்றியலுகரமாகும்.

‡ இவ்வகைக் குற்றியலுகரம், அரை மாத்திரையிற் குறைவதில்லை. (Vide-தொல்-குற்றியலுகரப் புணரியல் 1.)

* தமிழில் செய்யுளுக்கு இலக்கணம் ஏற்படுத்தப்பட்டதேயன்றி வசனத்திற்கு யாரும் வகுத்திலர். நம்முன்னோர் வசனநூல் என்பதை இலக்கியமென்று எண்ண விடங்கொடுத்திலர் போலும்.

† குற்றியலுகரம் கெடுமாயின், அது ஏறிய மெய்யுடனே கெடும், என்பது தொல்காப்பியர் துணிவு. (Vide தொல்காப்பியம் - எழுத்ததிகாரம். 433)

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[187-வது பக்கத் தொடர்ச்சி]

### 4-ம் பத்து 8-ம் தசகம்

அவதாரிகை:—மேல்தசகத்தில் விவரித்தபடி எம்பெருமானை விட்டுத் தாம் அகன்றிருக்கும் வியஸநத்தால் அவனைப் பலவாறு கூப்பிட்டழைத்தும் அவன் எழுந்தருளாமையால் நம் ஆழ்வார் தம்மை அவன் உபேக்ஷை செய்துவிட்டானென்று நிச்சயத்து இனி அவனால் உபேக்ஷிக்கப்பட்ட தன் ஆத்மஆத்மீயங்கள் அவனுக்கு அநுபாவியமுள்ளவைகளாக அவனுக்குப் பயன்படாததைக் கருதி தனக்கு அவைகள் ஒழிந்துபோவதில் யாதொரு குறைவுமில்லை யென்று ஒரு பிராட்டியின் விரஹாவஸ்தையில் அவள்தன் மனோபாவங்களைக் கூறுகின்ற பாசுரங்களால் இத் தசகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கருத்து—எம்பெருமானது உவகைக்கு நிலமில்லாத பக்தர்களின் தேகம் உயிர் அனைய எல்லாம் வியர்த்தம், ஆதலால் அவைகளின்மேல் ஆசாபாசங்கள் வைப்பது அறிவின்மையாம்.

---

#### 1-ம் பாசுரம்

ஏருளு மிறையோனுந் திசைமுகனும் திருமகளும்
கூறுளுந் தனியுடம்பன் குலங்குலமா யசுரர்களை
நீறுகும் படியாக நிருமித்துப் படைதொட்ட
மாறுளன் கவராத மணிமாமை குறைவிலமே.

பதக் குறிப்புக்கள்:—நிருமித்து - மனதால் சங்கல்பித்து, மாறுளன்-தன்னை யாச்ரயித்தவர்களது விரோதிகளிடத்தில் தானும் வேற்றுமை பாவமுள்ளவன், இதற்கு உதாரணமாகஸ்ரீ கிருஷ்ண பகவானது சரித்திரத்தின் ஒரு அம்சம் இங்கு எடுத்துக் கூறத்தக்கது- பாண்டவர்களுக்குத் தூதாய்ச் சென்றபோது விதுரர் வீட்டில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அமுதுசெய்தானே ஒழியத்துரியோதனன்வீட்டில் சாப்பிடவில்லை.கௌரவாள் மனைக்குப் பகவான் ஏன் அமுதுசெய்யப் போயிருக்கக்கூடாது என்று பிரஸ்தாபம் வர, "என் பக்தர்களாகிய பாண்டவர்களுக்கு விரோதியானவன் எனக்கும் விரோதியானபடியால் எதிரி வீட்டில் உண்ணலாகாது" என்ற நியாயத்தைப் பகவான் எடுத்துக் கூறியது ஞாபகத்தில் வைக்கத்தக்கது. கூறுளும்தனியுடம்பன் - பகவான் தன் உடலத்தில் தக்ஷிண பார்சுவத்தில் பரமசிவனையும், உந்தியில் நான்முகனையும் இடதுமார்பில் மஹாலெட்சுமியையும் ஏந்தி ஸேவை சாதித்த ஒரு அவசரத்தை எடுத்துரைத்தபடி. மாமை-சௌந்தரிய சோபை, குறைவிலம் - ஸௌந்தரியமிருந்ததினுலே நமக்கு ஒரு பிரயோஜநமும் உண்டாகவில்லையாகையால் அதனை இழந்ததாலே ஒரு குறைவும் ஏற்படவில்லை என்று தாத்பரியம். இத்தசகத்தின் பத்துப் பாசுரங்களினும் இப்படியே 'குறைவிலம்' என்பதற்குப் பொருள்கொள்க. நான்முகனும் பரமசிவனும் மஹாலெட்சுமியும் பகவானது திருமேனியைப் பங்குபோட்டுத் தாயபாகமாய் அநுபவிக்கின்றார்களென்று திருவுள்ளம்.

கருத்து:—என்னுடைய ஸௌந்தரியத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் கண்டு மகிழாமையால் அது இல்லாமற்போவதால் எனக்கு ஒரு குறையும் இல்லை என்கின்றார்.

---

#### 2-ம் பாசுரம்.

மணிமாமை குறைவில்லா
மலர்மாத ருறைமார்பன்
அணிமானத் தடவரைத்தோ
ளடலாழித் தடக்கையன்
பணிமானம் பிழையாமே
யடியேனைப் பணிகொண்ட
மணிமாயன் கவராத
மடநெஞ்சாற் குறைவிலமே.

பதக்குறிப்புக்கள் :—அணிமான-மானஅணி என்பது அந்வயம்-மான-பெரிதான, அணி-அழகு, அதாவது அழகில் பெரிதான ; பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட-கைங்கரியத்தின் அளவில் கொஞ்சம்கூடப் பிறழாத அடியேனை அந்தரங்கக் கைங்கரியத்தில் அமர்த்திக்கொண்ட, மணிமாயன் - இந்திரநீலம்போல்வர்ணமுள்ள ஸ்ரீகிருஷ்ணபகவான் (மாயம்-நீலவர்ணம்) மடநெஞ்சு - பகவானிடத்தில் ஸதா ஸர்வகாலமும் தாழ்ந்துகிடக்கும் என் மனம்.

பொழிப்புரை :—நிரவதிய ஸௌந்தரிய நிதியான திருத்தோள்களையுடையனுச்சக்கராயுதத்தைத்தரித்தவனுன எம்பெருமான் மஹாலெட்சுமியுடன் கலந்தருளுவதுபோல் என்னோடு பண்டு என் கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கலந்தருளினான். இப்போது அவன் கலவாதிருக்கையில் என் மடநெஞ்சு எனக்கு இல்லாமையால் எனக்கு ஒரு குறைவுமில்லை.

---

#### 3-ம் பாசுரம்.

மடநெஞ்சாற் குறைவில்லா
மகடாய்செய் தொருபேய்ச்சி
விடநஞ்ச முலைசுவைத்த
மிகுஞானச் சிறுகுழவி
படநாகத் தணைக்கிடந்த
பருவரைதோட் பரம்புருடன்
நெடுமாயன் கவராத
நிறைவினுற் குறைவிலமே.

உரை:—படநாகத்து அணை - ஆதிசேஷனுகிய படுக்கைமேல், கிடந்த - உறங்கும், பரு வரைத் தோள் - மலைபோன்ற விசாலமான தோள்களையுடைய, பரம்புருடன் - பரமபுருடனுன, நெடுமாயன்-நிரவதிக ஆச்சரியபூதன், மட - தான் கொடுக்கும் முலையைக் கிருஷ்ணபகவான் நன்கு உண்ண வேணுமென்ற ஆசைகொண்ட, நெஞ்சால் குறைவில்லா-பூரணமான மனதுடன், மகள் தாய்செய்து ஒருபேய்ச்சி (தாய் மகள் பேய்ச்சி செய்து என்று அந்வியக்க) பேய்ச்சியான ராக்ஷஸி மானிடத்தாய்போல் வேஷமிட்டு (இதுபூதனை விஷமுலையைக் கிருஷ்ணனுக்குக் கொடுத்த விருத்தாந்தம்) விட-நசித்து உயிரிழக்கும்படி, நஞ்சம் முலை சுவைத்த - விஷந்தடவிய ஸ்தந்யபானஞ் செய்த, மிகுஞான சிறுகுழவி-நஞ்சான முலையென்று குழவியானலும்செவ்வையாய் அறிந்தால[illegible] மாமாயன், கவராத-ஆதரியாத, நிறைவினால் - [illegible]



சுவரூபம் பூரணமாயுள்ள குணத்தால், குறைவிலம் - எனக்கொரு ஆத்திரமுமில்லை, என் பெண்குணம் குன்றினலும் எனக்கு ஒரு குறைவில்லை.

---

#### 4-ம் பாசுரம்

நிறைவினுற் குறைவில்லா
நெடும்பணைத்தோள் மடப்பின்னை
பொறையினல் முலையணைவான்
பொருவிடையே ழடர்த்துகந்த
கறையினர் துவருடுக்கை
கடையாலின் கழிகோல்கை
சறையினர் கவராத
தளிர்நிறத்தால் குறைவிலமே.

குறிப்புக்கள்:—பின்னை முலையணைவான்-நப்பின்னை பிராட்டியை மணந்துகொள்ளும் நிமித்தம், விடை - எருதுகளை, அடர்த்த - வென்ற (இவ்வேழ் துஷ்ட மிருகங்களைக் கொன்றோ ஜயித்தோ அடக்குபவனுக்கே நப்பின்னை வாழ்க்கைப்படுவளென்று கன்னியா சுல்கம் அவள் தகப்பன் ஏற்படுத்தியிருந்தான்) பொறையினல் - அமைதியினல், துஷ்ட மிருகங்களை ஆற்றல்கொண்டு மாத்திரம் அடக்க வொண்ணுது. சமயம்பார்த்துஊஹத்தினலும் ஊக்கத்தினலும் அடக்கவேணும். ஆகையினல் "சாமர்த்தியத்தினல்" என்று பொருள் கொள்வது உசிதம். பொரு-சண்டைக்குத் தயாராயிருந்த, உகந்த - ஜயகோஷம் செய்த, கறையினர் துவர் உடுக்கை - இடையர்கள் இடுப்பில் ஆட்டுத்தோலோ அல்லது வர்ணமான துணியோ உடுப்பார்கள், இது அவர்கள் பறித்துண்ணும் காட்டுப் பழங்களின் சாற்றால் கறையடைந்து விவர்ணமாய் இருக்கும். "கடையாலின் கழி"-கனத்த மூங்கில் குழாயை ஒரு பக்கம் சாய்வாய்ச் சீவிக் கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் தண்ணீர் மருந்து முதலானது வார்ப்பதற்குச் செய்த குழாய், கோல் - இடையர் துஷ்ட மாடுகளை அடித்து ஓட்டும் மூங்கிற்கழி, சறையனர் - இடுப்பிலே கட்டின மணிகளை உடையவனை கிருஷ்ணபகவான், கவராத-ஆசைப்பட்டு ஆதரியாத, தளிர் நிறத்தால் குறைவிலம் - தளிர் போன்று பிரகாசிக்கும் எனது வர்ணசோபை நில்லாமல் நீங்கிவிட்டது; ஆயினும் அதுபற்றி எனக்கு ஒரு குறையுமில்லை.

கருத்து:—ஆத்ம குணத்தாலும் ரூபலாவண்யத்தாலும் நிறைவுபெற்ற நப்பின்னைப் பிராட்டியோடு சம்ஸ்லேஷித்ததுபோல் என்னுடனும் கலந்து கிருஷ்ண பகவான் கவராதகாந்தி எனக்கு அவசியமில்லைஎன்கிறார்.

முதல் பாசுரத்தில் அழகைச் சொன்னபடி, இப்பாசுரத்தில் தேக காந்தியைச் சொன்னபடி - ஆகையால் புனருத்தியில்லை.

---

# தேவகி

[189-வது பக்கத் தொடர்ச்சி]

## அத்தியாயம் 6.

அன்று நான் வீடுவந்தெய்தியதும் உண்டிகொண்டு அன்னையார் விடையுமேற்றுப் படுக்கச்சென்றேன். மாலை நிகழ்ச்சியெல்லாம் வன்மையுடன் என் மனங்கொண்டுழக்கத் தூக்கமோ வந்ததில்லை. நிகழ்ந்தன நினைப்பதும் படுக்கையிற் புரள்வதுமாய் அவ்விரவின் பெரும்பாகம் கழியும்வேளை யாமக்கோழியும் கூவியது. பின்னரென் கண்களும் ஒருவாறு அயர்வுறத்துயிலமைந்தேன். உற்றவென் துயிலைத்தொடர்ந்து தோன்றினன் அண்ணல் என் கோ; மாலையிலென்னைத் தன்னோடு கவர்ந்துசென்றவக் கள்வன். முறுவல் தோய் முகத்தோடு என் கண்கொள்ளாக் காட்சியாய் அவன் என் முன்னே வந்து நனிநின்றான். நின்றவனை நோக்கினேன். அவன் காலிலும் ஊனமில்லை, தலையிலும் காயமில்லை. அவன் நெடுந்தோளும் அருள் நகையும் என்னுயிரொடு ஊனினுணர்வையும் கவர்ந்துவிடக் கல்லாய்ச் சமைந்துவிட்டேன். இன்னபடி என்னைக் கவர்ந்துவிட்ட அச் செம்மல் என்வயின் அண்மி என் கரத்தினைப்பற்ற அவன் கைவழி என்னுணர்வும் மீண்டது.மீண்டவென் னுணர்வு தூண்ட நாணத்தால் கரமகற்றிச் சற்றே விலகி அயல்நின்றேன். அவனும் என்னைச்சிறிது இளகிநோக்கிப் பின், "நவையில் நலமெனும் ஒரு பொருள் பெண்ணுருக்கொண்டு நின்றுலென்ன என் முன்னேநிற்கும் மாதரசி, நீ யாவளோ, நீ யுறையும் பேறுபெற்ற அப் பதியும் யாதோ, நின்னைப் பயந்தவர் செய்தவம் பெரிதுடையர்" என்னவும், "பெரியோய், பிறந்தவன்றே பெற்றவர்க்குக் கொள்ளியும் கொண்டுவந்த பாவியென்னைப் பெறுவதற்கு அவர் நூற்ற நோன்பு சாலப்பெரிதுகாண். மற்று என்னையோ ஐய, யாவளெனக் கேட்கின்றாய். இவ்வேளை நான் யாவளென்று எனக்குமே தெரியவில்லை. திகைக்கின்றேன், விடையொன்றளிப்பதற்குத் தெரியகில்லேன்" என்று என் வாய் மெல்லென மொழிய, அவனும் வேட்கையின் வயத்தனாகி, "பெண்ணே, பெருமகளே, எழிலின் உருவே, என்னுயிரினரணே, உருகியோடு மென்னுயிர் காத்தளிப்பாய், தஞ்சமென வந்தடைந்தேன்" என்று கனிந்து நனி கூறிப் பந்தென வென்னைப் பற்றியெடுத்து வெவ்விய தன் துவர்வாய் நலமளித்தென்னதரத்தைச் செழிக்கச்செய்தான். பெருமகன்புரிந்த விவ்வருள் ஏழையேன் என்மடநெஞ்சில் விஞ்சவைத்த உவகையின் அளவோ கடவுளினும் பெரியது. இன்றே புத்துயிரும் பெருவாழ்வும் யான்பெற்றேன் ; உலகளந்த பெருமாள்போல் பெருகியதென் னுவகை. எனினும் மறு கணம் பொல்லா நாணம் என்னைப்பற்ற, அவன் புல்லிய பிடிகழன்று ஒருசிறை யொதுங்கினேன். என் முகமும் கையிற் புதைந்தது.யாக்கையெலாம் குலுங்க, என்னுள்ளமோ யுடைந்துவிடுமெனலாயிற்று. என் நிலை கண்டசெம்மல், "நாணத்தால் நையும் நல்லாய், அந்நாணத்தின் இரகசியத்தை நானறிவேன். நின்னைச் சிறைகொண்டு வருத்துமவ் வீணுய் நாணினைப் புறங்காண என்பாலோர் மருந்துண்டு. அகத்தியமும் மதர்நெடுங்கண் மாதராய் யான் கற்றுள்ளேன்" என்று கூறினுய் ஆசையும் நாணமும் பூசலிட நிற்குமென்னை மீண்டுமோர் முறை பற்றியெடுத்து வானோர் இறவொழிக்க அமுதீந்த நெடுமால்போல் என் நாணம் மடிந்தொழியத் தன் அதரத்தின் மருந்தினை யுதிர்த்தான்.

அவ்வளவில் கடைச்சாமக் கோழியொன்று கூவிற்று. திடுக்குற்றுக் கடிதின் படுக்கைவிட் டெழுந்தேன். எழுந்த நான் நாற்புறமும் பார்த்தேன். வீரனும் அங்கில்லை, என் அறைக்கதவும் தாளிட்ட படியேதானிருந்தது. கண்டது கனவென்று தேறினேன், பொழுதும் புலர்ந்தது.

நா னங்கு வந்ததுமுதற் கண்டிலாதவோர் பரபரப்பும் நடமாட்டமும் அன்று அம்மாளிகையிற் காணப்பட்டது. பலர் வருவதும் போவதுமாயிருந்தனர். காரணமோ யாதுந் தெரியவில்லை. என் மாணவியும் நெடுநேரம் என்னிடம் வந்திலள். அங்குமிங்குமாய் விரைந்துகொண்டிருந்த ஆட்களில் ஒருவனை யழைத்து வியடம் என்னவென்று யான் கேட்க 'ஜமீன்தார் வந்துள்ளார்' என்றுசொல்லி அவன்விரைந்தான். இவ்வேளை என் மாணவியும் நானிருந்தவிடம் வந்தனள். தன் தகப்பனார் வந்துள செய்தியையும் அவருக்கு உடம்பு சுகமில்லாதபடியினால் வயித்தியம் நடக்கின்றதென்றும் கூறினாள்.

நேற்றுமாலை என்னுணர்வினைக் கவர்ந்தகன்ற செம்மல்தான் இக்கோயிலுடைக் கோமானோ என்று அயிர்த்தேன். உடற் சுகமில்லாமையின் விவரத்தை இந்திராணியினிடமிருந்து அறிய இயலவில்லை. தலையிலும் காலிலும் கட்டுக் கட்டப்பெற்றுளதென்றுமாத்திரம் கூறினாள் அவள். அதுமுதல் இவ் வில்லக்கிழவனைக் காணவேண்டுமெனும் ஒருள்ளக்கிளர்ச்சி யென்பால் எழுந்தது. ஒருவார காலமாகியும் ஜமீன்தார் வெளிப்புறப்படவில்லை. அவரைக் காணவேண்டு மென்னும் அவாவோ வளர்பிறைச் சந்திரன் என வென்னுழை வளர்வதாயிற்று. ஒரு பகல் ஓர் வேலையாளன் என் அறை வந்து 'பிற்பகல் போஜனத்திற்குப்பின், ஜமீன்தார் தங்களைமேன்மாடம்வரும்படிபணித்தார்' என்று கூறினான். இச்செய்தி யெனக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தந்தது. பகல்போஜனம்கொண்டேன். வழக்கம் போல் என்னறைக்கண்சென்று படுத்தேன். படுக்கை கொள்ளவில்லை. நேரமோ வளர்ந்தது. இன்றைக்குப் பிற்பகல் என்பதே இல்லாமற் போய்விடுமோ என்று அயர்வேன். பின் எழுந்து கூட்டினிற் பறவைபோல் அங்குமிங்கும் என் அறைக்குள் நடமாடுவேன். புத்தகத்தை யெடுத்துப் புரட்டுவேன், கீழே வைப்பேன். இன்னபடி பித்துப்பிடித்தவள்போல் கடவாத காலத்தைக் கடத்தினேன். பிற்பகலும் வந்தது. பெருமூச்சு விட்டேன். சிற்றுண்டி யருந்திப் பின் மேன்மாடம் சென்றேன். சென்றதும் ஓராள் வந்தென்னை ஜமீன்தார் இருக்கும் அறைக்குள் அழைத்துச் சென்றான்.

சென்ற நான் அன்றுமாலையிலும், பின் இரவு கனவிலும், கண்ட செம்மலையே படுக்கையில் அங்குப்படுத்திருக்கக் கண்டு திகைப்பு மிகவெய்தினேன். அன்னவரோ என்னைத்தான் திரும்பியும் பார்க்கவில்லை. என்னையறியாதவர் போல் அவர் இருந்தது எனக்கு வியப்பைத் தந்தது. அவர் படுக்கையினருகில் அன்னையார் வீற்றிருந்தார். அச்சமயம் இந்திராணி அறையினுள் வந்து தந்தையை நெருங்கினாள். அருமை மகளையும் அவர் அன்புடன் வரவேற்கவில்லை. இப்பராமுகம் இந்திராணியின் முகத்தைக் குவியச் செய்தது. மகளது இவ்வேறுபாடு கண்ட ஜமீன்தார், 'அம்மா, கட்டிலில் ஏறி உட்கார்' என்று சொல்லிக் குவிந்த அவள் முகத்தைத் திருத்திவைத்தார். இந்திராணியும் உவகையுடன் ஏறி உட்கார்ந்தாள். தன் மகளுக்கு முத்தம் அளித்துப் பின் முன்போலத் தன் நாட்டத்தை வேறிடத்தே செலுத்தினார். வந்த எனக்கு ஜமீன்தார் முகந்தராதது கண்டு அன்னையார், 'அம்மா, உட்கார்' என்றுபணித்துப் பின் தன்மகனைநோக்கி, 'இப்பெண்தான் இந்திராணியின் உபாத்யாயினி' என்றார்.

இன்னதற்கு விடையாக ஜமீன்தார் "நன்று" என்று சொல்லிச் சும்மாவிருந்தார்.

என் வரவைத்தான் அவர்விரும்பவில்லையோ என்று ஜமீன்தாரின் வார்த்தை என்னை அயிர்க்கச் செய்தது. என்னை முன்னொருமாலை கண்டிருந்தும், என்னுதவி பெற்றிருந்தும் இப்படி என்னை நடத்திய முறையின் பொருள் எனக்கு விளங்கவில்லை. எனினும் அன்னையார் பணித்தபடி இருக்கை யொன்றில் மெல்ல அமர்ந்தேன். என்னுள்ளத்தில் நடமாடும் எண்ணத்தை ஊகித்தறிந்த அன்னையார், மகனது உடல்நிலையைப் பற்றியும் குதிரையிலிருந்து கீழே விழுந்தது பற்றியும் கூறினார்.

அச்சமயம், 'அம்மா, தாகமாயிருக்கின்றது, தேநீர் உளதோ,' என்றார் ஜமீன்தார். உடனே ஒரு ஏவலாளன் தேநீர் கொண்டுவந்தான். அது சூடாயிருக்கவே வள்ளலார் தேநீர்க் கோப்பையை என்பக்கல் நீட்ட அதை வாங்கி ஆற்றிக்கொடுத்தேன். அவரும் அதை வாங்கிப் பருகினார். பேசுவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்த இந்திராணியம்மாள், 'எனக்கு என்ன வாங்கி வந்தாய்' என்று மழலையில்மொழிய ஐயனும், 'கண்ணே, உனக்கு வேண்டுவதனைத்தும் வாங்கித் தருகின்றேன்.'' என்றுகூறித் தன் செல்வியை ஆர்வமுடனணைத்துக்கொண்டார்.

தந்தையும் மகளும் உவகையில் தழைக்கின்றவேளை அன்னையார் ஏதோ வேலையாய் வெளியே சென்றார். அன்னையார் சென்றதும், அப்பெருமகன் என்னை நோக்கி, "தேவகி, சொல்லச் சுவைக்கின்ற இப்பேர் சொல்லி உன்னை நான் அழைக்கலாமோ" என்றார்.

"ஐயா, நின் வாய்புக இப்பேர் பெருநோன்பு நோற்றிருக்கவேண்டும். திருவுளப்படி செய்யலாம்."

"உனக்கொரு பரிசில் அளிக்க விரும்புகின்றேன். பெறுவையோ"

" தானேயாய் நிற்கும் தனிப்பொருளின்பால் அல்லாது உலோகாயத விழைவினை வளர்க்கும் சிறுமாநிடப் பொருள்களின்பால் பற்றிலாதேன் நான். மேலும், பரிசில் பெறுவதற்குரியவாறு நான் செய்துளது யாதென்றும் தெரியகில்லேன்"

என் மொழிகேட்டுச் சிறிதுநேரம் சும்மாவிருந்தார். பின், "பெண்ணே, என்னருமை மகளின்பால் நீ காட்டும் பரிவையும், கற்பிக்கும் ஊக்கத்தையும், உன் குணச் சிறப்பையும் தெரிந்துகொண்டேன். எனவே பெறுவதற்குரியவளே, பெறுவாய்" என்றார்.

"ஐய, நும்மகிழ்வுரையே ஊதியமாய் எனக்கு ஈடு செய்கின்றது. நான் என்கடனாற்றும் முறையிற் பிழையின்றிச் செய்யவேண்டுவனவற்றைச் செய்கின்றேன் என்று கூறப்பெற்றதே போதாதோ."

"பெண்ணே, நின் சொல்வளம் கண்டேன். கற்றதனாலாய பயன் நாப்பெறும் திறமைதானோ."

"பெரியோய், யோகத்துறை படிவோர் முடிவாகப் பெறுவது வேறொன்றாயினும் இடையிலே வந்தடைகின்ற சித்திகள் பலவன்றோ."



அன்று கனவிலன்றி நான் என்றும் கண்டிராத புன்முறுவல், என் உரைகேட்க வந்ததுபோல் அவர் அதரத்தில் தோன்றுமளவில் என் உள்ளம் உற்ற உவகைக்குக் கரையேயில்லை. "பாவாய் வளமை நிறைந்த உன்னுரை கேட்க மகிழ்ந்தேன். நீ பிறக்கப் பாக்கியம் செய்தவூர் யாதென்று நான் அறியலாமோ." என்று கேட்டார்.

அன்றே நான் பிறந்தவூரும், இந்நகர் வந்ததற்குக் காரணமும் கூறியிருக்க, மீண்டுமிவர் இன்னபடி கேட்பதற்கு மிகவியந்து சும்மாவிருந்தேன். இடக்கைவிரலால் தலைவருடி ஏதோ சிந்தனைசெய்பவர்போ லிருந்த அவர் 'பெற்றோர் இல்லையோ' என்றார்.

"என் பெற்றோர்க்கு எமனாய்வந்து நான் பிறக்க அவர் எங்ஙனம் இருக்கக்கூடும்" என்று விடையளித்தேன்.

"காலனது உறவும் பூண்டவளோ நீ; கிளைஞர் பிறர் இலையோ உனக்கு?"

" என் மாமன்மனைவி யொருத்தி யிருக்கின்றாள். உலகிலுள்ள பெண்மக்கள்பால் பரிவுகொண்டுழைக்கின்ற அம்மாதினிற்கு என்னைக் கவனிக்க அவகாசமேது. எனவே இங்கு வருகின்றவரை உறைந்திருந்த என் மாமன்மனை யகன்றேன்."

"அம்மனையினின்று அகன்றது ஏனோ"

"அவர்களுக்குச் சுமையாயிருக்க மனமில்லாமல், இங்ஙனம் செய்தேன்."

"நன்று; நீ எவ்வளவுதூரம் படித்திருக்கின்றாய்"

"மெட்ரிகுலேஷன் வகுப்பில் இரண்டு மூன்று மாதங்கள் படித்தேன். பின்னர்ப் பள்ளியை விடநேர்ந்தது. எனினும், ஒழிந்த நேரம் படிக்கும் பழக்கம் உடையேன். தங்கள் அருமைப் புதல்விக்குப் போதிக்கப் போதியவளவு கற்றுளேன்."

"சித்திரம் தீட்டும் பழக்க முளதோ"

"சிறிது பயிற்சி யன்னதிலும் பெற்றுள்ளேன்."

"உன் கைவண்ணம் காண விரும்புகின்றேன்."

"விரும்பின் ஐய, கடந்த வாரத்தில் தீட்டி முடித்த படமொன்றுளது. பணியதுவாயின் கொண்டு வருகின்றேன்" என்று நான் எழுதி முடித்த படத்தைக் கொண்டுவந்து கொடுத்தேன். அதைச் சிறிதுநோக்கிப் பின் என்னைப் பார்த்து மெல்லிய முறுவல் பூத்தார்.

நானும் தரையை நோக்கியவண்ணமிருந்தேன். இப்படம் விளைவித்தமௌனத்தை விலக்க இந்திராணியம்மாள் உதவினாள். தந்தையார் கையிலிருந்த படத்தை வாங்கிப்பார்த்து "இக்குதிரை நமது குதிரைபோலிருக்கின்றது" என்றாள். தம் மகளின் கையிருந்த படத்தைத்தானும் உற்றுநோக்கியவண்ணமே மீண்டும் 'நின் கைகாட்டும் திறமும் கண்டேன். இதைத்தீட்டுகையில் உள்ளத்தில் உவகையோடு தீட்டினையோ' என்றார். இன்னதற்கு விடையொன்றும் கூறாமல் நானிருக்க, அன்னையார் அவ்வயின்வந்தடைந்தார். ஜமீன்தாரும் அயர்வினால் ஒன்றும் உரையாமலிருந்தனர். அவர் திருமுகத்தில் வியர்வரும்ப அன்னையார் அதைத் துடைத்துவிட்டுச் சிறிது விசிறிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் அன்னையை நோக்கித் தாகத்திற்குப் பானம் கேட்க, தேத்தண்ணீர் அளிக்கப்பெற்றனர். அதை அருந்திப் பின், என்னை நோக்கிப் 'பெண்ணே நீ போகலாம்' என்று கூறி மீண்டும் கண்ணை மூடிக்கொண்டார். கீழிறங்கிச்செல்ல என் மனமோ மறுத்தது, எனினும் என்னுடலை இழுத்துக்கொண்டு என்னறை வந்துசேர்ந்தேன்.

ஜமீன்தார் நடந்துகொண்ட விதமும் அவர் வார்த்தையாடியவிதமும்எனக்கு விந்தையாகவேஇருந்தன. அன்று அவர் குதிரையினின்று கீழே விழுந்திருக்கையில் என்னுடைய உதவி பெற்றதைப்பற்றி ஒரு வார்த்தை கூறவில்லை. என்னை அறியாதவர்போல் என்னிடம் உரையாடிய முறைக்கு எப்பொருள் கொள்வதென்று தெரியவில்லை. இன்னபடி நான் சிந்தித்தவளா யிருக்கையில் அன்னையார் என்னறை வந்தார். வந்தவர், "பெண்ணே, என் மகன்வழி புதியவர்க்கு விந்தையாயிருக்கும். எனினும் மிகவும் நல்லவன், கபடமறியான். வன்சொல்லும் அவன் நாக்கூறியறியாது. அருளுடையோன் அவன்; உடல்நிலை நேரே யில்லாததினால், அவன் ஒருவரிடமும் கலகலவெனப் பேசுவதில்லை. எனவே வித்தியாசமாய் நினைக்காதே" என்று சொல்லியகன்றார்.

இந்திராணிக்குப் பாடம் கற்பித்துவிட்டு அவ்விரவை நான் ஜமீன்தாரின் திருநினைவின் உவகையில் கழித்தேன்.

189144

# வாலி வதை

மகாராஜருடன் அங்கிசான்றாய் உறவினைத் துணிந்து அவருடைய குறைகளை முடித்துக் கிஷ்கிந்தையை முடிசூட்டுவதாக வாக்குத்தத்தம் செய்தது காரணமாக வாலியைப் பெருமாள் சம்ஹாரம் செய்தருளினார் என்ற விவரம் யாவரும் அறிந்ததே. மகாவீரனாகிய வாலியை ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் மறைந்து நின்று வதைசெய்தது தர்மசாஸ்திரத்தின்பாற்படாதென்றும், அவ்வதையைத் தேவபாஷையினிற் கதைசெய்த ஸ்ரீ வால்மீகிநாதனும் தமிழிற் பெருங் காப்பியமாகப் பாடியருளிய கல்வியிற் பெரியாரும் சமாதானம் கூறமுடியாது நின்றனர் என்றும், ஆகவே காசில்கொற்றத் திராகவன் வீரம் இவ்விடம் மாசுண்டதென்றும் பண்டிதரும் பாமரரும் கூறிப்போவர். இவ்வுலகத்தில் தோன்றிய ஒவ்வொரு சேதனனும் விஷய ஆராய்ச்சியின்றிச் சுலபமாய்ப் பாபம் தேடிக் கொள்வதற்கு ஹேதுவாய் நிற்பது இந்த விருத்தாந்தம் என்று சொல்லத் தட்டில்லை. குற்றங் கூறுவதையே கோட்பாடாகக் கொண்டார் ஸ்ரீ இராகவனையும் விட்டிலர் என்று ஸ்ரீநிகமாந்த மகாதேசிகனும் அருளிச்செய்வர். ஆகவே இவ்விஷயத்தில் கவிச்சக்ரவர்த்தியார் கொள்கை இன்னதென்பதை ஆராய்ச்சிசெய்வது உசிதமாகும்.

கபந்தன், சபரி முதலானோர் "செயலைச் செற்ற பகைதெறுவான் தெரிந்து அயலைப்பற்றித் துணையமைய" வேண்டுமென்று கூறி அவ்விதம் துணையாகக் கோடற்குரியான் சுக்ரீவன் என்று முடித்தார்கள். அதை உட்கொண்டு ரகுவீரர்கள் ரிசியமூக பர்வதத்தை நோக்கி எழுந்தருளினார்கள். இவர்கள் வரு

தலைக்கண்ணுற்று, இவர்கள் வாலியின்ஏவலால்வரும் பகைஞர் என்று சுக்ரீவன் அச்சமுற்று ஹனுமானை அனுப்புகிருன். அந்த நவவியாகரண பண்டிதனும் மகா வீரர்களது வரலாற்றைத் தெளிந்து இவர்கள் சுக்ரீவனுடன் வலிய சக்யம்செய்ய வருகிற சந்தோஷ சமாசாரத்தில் புளகாங்கிதனுய் மகாராஜரிடம்இதை விஞ்ஞாபகம் செய்கிருன்.

"புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியோ"

என்று சங்கிக்கக்கிடந்த பாவத்திற்கு இவ்விடம் நாம் உத்தரம் தெரிந்துகொள்கிறோம். அதை

"நீயையா தவமிழைத் துடைமையால் நெடுமனந்
தூயையா வுடைமையா லுறவினைத் துணிகுவார்"

என்று ஆஞ்சனேயன் வாயிலேபோட்டுச் சொல்லுகிருர் கம்பர். பின்னர் "மாய வரக்கனை வாலிற்பற்றி இவன்கட் டந்து குரக்கியற்ரொழிலுங் காட்ட" வல்ல வாலியின் பிரதாபத்தையும் வரங்களையும் போரின் ஆற்றலையும் வாயுபுத்திரனிடம் கேட்டும் பெருமாள் மனத்தில், இவனைக் கைக்கொள்வதைவிட்டுச் சுக்ரீவனைச் சிநேகம்செய்தது தவறு என்று படவில்லை. இயற்கை அமைப்பிலே பெருமாள் மகா பாபிகளுடன் சிநேகம்செய்ய நேரான் என்று கம்பர் இவ்விடம் சுட்டிக்காட்டிச் செல்கின்ருர். இதுவே கபந்தனது அபிப்பிராயமாதலை,

"ஆயது செய்கை யென்ப
தறத்துறை நெறியி னெண்ணித்
தீயவர்ச் சேர்க்கி லாது
செவ்வியோர்ச் சேர்த்துச் செய்தல்"

என்று முன்காண்டத்தில் விளக்கியுள்ளார் கவியும் அபயம் என்ற பொழுதத்தே அபயதானம் ஈதலே கடப்பாடாகக்கொண்ட பிரபுவும் சுக்ரீவன் தன் திருவடிகளில் சரணம்புகவும்.

"உன்றனக் குரிய வின்ப துன்பங்க ளுள்ள முன்னுள்
சென்றன போக மேல்வந் துறுவன தீர்ப்ப லன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேரென என்று" நேர்ந்தான்

என்ருர் கவிசிரேஷ்டரும்.

சுக்ரீவனைக் கொல்வதாகக் கொண்ட துவேஷத்திற்கும் அவன் ஸ்திரீயை பரிக்கிரகம் செய்ததற்கும் வாலிக்கு யாதொரு நியாயமான முகாந்திரமுமில்லை யென்பது, இவ்வரலாற்றைச் சாமானியமாகப் படித்தோரும் தெளிந்துகொள்ளல் இயல்பே. எந்த நிலைமையிலும் சுக்ரீவன்பால் லவலேசமாயினும் குற்றங் கூற ஒருவரும் துணியார் என்பது முடிந்த பக்ஷமே. பெருமாளும் மகாராஜரும் சிநேகம்செய்த பின்னரே வாலியின் வரலாறு சவிஸ்தாரமாக ஆஞ்சநேயன் சொல்லப் பிரபுவும் கேட்கின்ருன். தன் இளையவன் தாரத்தை வாலியும் விரும்பின சமாசாரம் கேட்டவுடன்,

"வைய நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கண்
செய்ய தாமரை யாம்பலம்போதெனச் சிவந்த"

என்று கூறி

"ஈர நீங்கிய சிற்றவை சொற்றன ளென்ன
ஆரம் வீங்குதோட் டம்பிக்குத் தன்னர சுரிமைப்
பார மீந்தவன் பரிவில னொருவன்ற னிளையோன்
தாரம் வௌவின னென்றசொற் றரிக்குமா றுளதோ'

என்று பெருமாள், வாலியின் கொடுமையான பாபங்களைக் கேட்டுச் சகிக்கமுடியாது நின்ற தன்மையைக் காட்டியுள்ளார் கவியும். பின்னர்ப் பெருமாள் வாலியை வதைப்பதாகச் சூளுற்ற பாசுரமும் இங்கே காட்டல் அவசியமாம்.

உலக மேழினோ டேழும்வந் தவனுயிர்க் குதவி
விலகுமென்னினும் வில்லுடைய வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் ருரமு முனக்கின்று தருவென்
புலமை யோயவ னுறைவிடங் காட்டென்று புகன்ருன்"

வாலியைச் சம்ஹரிப்பதற்கு அவனுறைவிடம்சுக்ரீவன் காட்டலே குறை என்று க்ஷணமாத்திரமும் காலந்தாழ்க்க ஸ்ரீ ராகவன் பொருதிருந்த வேகம் இப்பாசுரத்தினலே போதரும். இப்பால் பெருமாள் ஆக்ஞைப்படி சுக்ரீவனல் வலிந்து அறைகூவி வாலியுற்றவனுய்ச் சகோதரர்களுக்குள் கடுமையாய்ப்போர் நிகழ்ந்து ஸ்ரீராம னம்பால் வாலி கீழே விழுந்ததன்மை யாவரும் அறிந்ததே. தன் மார்பில் ராமபாணம் ஊடுருவிச்சென்று உயிர்போக்குவதற்காக நிற்கும் நிலைமையை நோக்கி இவனை "ஏசுவான் இயம்பின" பாசுரங்களும் இவ்விடத்திலே ஞாபகத்திற்கு வரலாம். இருவர்களுக்கும் நடந்த சம்பாஷணையில் வாலியின்பால் பெருமாளும் கீழே கண்ட குற்றங்களை ஏற்படுத்துகிற விவரமும் நாம் பார்க்கிறோம்.

1. மாயாவியைச் சம்ஹரிப்பதாகப் பிலத்துவாரம் வழிச்சென்ற வாலி 14 ருதுக்கள் கழிந்தும் வாரது நின்ற காரணத்தால் அவன் இறந்துபட்டான் என்று நினைத்து வானரசிரேஷ்டரும் மந்திரிகளும் சேனைத் தலைவரும் வற்புறுத்தியதனுல்மட்டும் சுக்ரீவன் தன் கொள்கைக்கு மாருக ராஜ்யபாரம் வகித்தான் என்று விவரம் கேட்டும் மாயாவியைக் கொன்று பிலத்தினின்றும் திரும்பியவாலி தம்பியைக் "கொல்லலுற்றதும், கோதவற் கில்லை யென்பதுணர்ந்து மிரங்காது" நின்றது.

2. பின்னர் வாலிபால் தான் தோற்ற தன்மையை ஒப்புக்கொண்டு சுக்ரீவன் அஞ்சலியஸ்தனுய்த் தன்னைக் காப்பாற்றும்படி சரணம்புகுந்து பிரார்த்தித்தும் இவன் கேளாது கூற்றமுண்ணக் கொடுப்பான் துணிந்தது.

3. எந்த நிலைமையிலும் தம்பி என்றிரங்காது புறங்காட்டி ஓடிய இவனை வதைசெய்ய எத்தனித்தது.

4. கடைசியாக, தேகபலத்தினுலும், வரச்செருக்கினுலும் அறந்திறம்பி, தன் தம்பியின் தருமபத்தினியைப் பரிக்கிரகம் செய்தது. இக்குற்றங்களை மிகவும் பொருத்தமுடன் (Categorical) பிரபு கோடிகரிக்கிருன். இவைகளுக்குப் பதில்கூற எத்தனித்த வாலியும் முதல் மூன்று குற்றங்களுக்குச் சமாதானம் கூற முடியாமல் நிற்கிருன். கடைசியாக ருமையைப் பெண்டாண்ட தோஷத்திற்குத் தங்களது வானர ஜாதிக்குப் பிரயுக்தமாக ஏற்பட்ட ஆசாரணைகளைக் காரணங் காட்டி முடிக்கிருன். இதற்கு மிகவும் ஆச்சரியமான காரணங்களுடன் பெருமாளும் ஆக்ஷேபணை கூறி நிற்கும் பாசுரங்கள் மிகவும் அழகு வாய்ந்துள்ளன. கவிச்சக்கிரவர்த்தியார் இங்கே எடுத்துக் காட்டிய வழி முதனூலிற் காணப்படாததாய் நவீன நாகரிக முறைப்படி அமைந்ததென்றும், உயரிய உத்தம தர்ம சாஸ்திரங்களின் நுட்பமான பொருள்களை (highly evolved ethical and moral principles) அடிப்படையாகக் கொண்டு பிறந்தது என்




றும், வித்யார்த்திகள் மனதில் ஆற்றவொண்ணு இன்பத்தைப் பிறப்பித்துப் பரவசமாக்குமியல்பினது என்றும் பெரியோர் கூருநிற்பர். ஸர்வேசுரன் பக்கலிலே ஸர்வார்த்த கிரகணம் பண்ணின திருமங்கையாழ்வார் திருக்கண்ணமங்கையில் கோயில்கொண்டிருக்கும் பக்தவத்ஸலப் பெருமானை மங்களாசாஸனம் செய்தவிடத்து அவன் விஷயமாய்த் தான் பாடின பாசுரங்களில் தானே ஆழங்கால் பட்டவராய் அவைகளின் யோக்யதையைச் சேதனர்கள் அனுபவித்து உஜ்ஜீவித்தது நிற்க,

"மெய்ம்மை சொல்லின் வெண்சங்கமொன்றேந்திய
கண்ண! நின்றனக்கும்
குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே"

என்று ஸர்வக்ஞனை அப்பரம்பொருளையும் அப்பாசுரங்களைப் பயின்று சிரக்கம்பம் செய்யுமாறு கோரின கவித்திறம் இவிடம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அநேககாலம் கொடுந் தபசு பண்ணி அருமையாய்ப் பெருமாளை ஸேவிக்கப்பெற்றும் அப்புண்ய புருஷனை வாயார வாழ்த்துதற்குச் சக்தியற்றவனுய் "ஊமனர் கண்ட கனவிலும் பழுதாய்"ப் பேச மாட்டாது துருவன் இடர்ப்பட்டு நிற்கவும், அவனுக்கு ஞானபாகத்தை ஊட்டி வாய்திறந்து தன்னைப் பல்லாண்டு பாடுவதற்காக ஞானப் பிரதானமான ஸ்ரீ பாஞ்சஜன்னியஆழ்வானை அப் பரமபக்தன் சிரசிலே வைத்தருளினுன் எம்பெருமான் என்பதும், அது கொண்டு அத்துருவனும் "நாராயணவென்ன நாவென்ன நாவே" என்ற கருத்திற்கிணங்கப் பெருமானை வாசாமகோசரமாக வாழ்த்தினுன் என்றும் ஸ்ரீ பாகவதத்திலே நாம் பார்க்கிறோம். ஞானத்திற்கு அதிஷ்டானமாய் ஊமையையும் பேசச்செய்து பாரமார்த்திக விஷயத்திலே புத்தியைப் புகட்டு மியல்பினதான பிரணவாகாரமான வெண்சங்கமொன்றேந்தி நீ நிற்கவும், "நீயும் சிஷ்யக்கிரமத்திலே என் கவிநலம் கற்கலாம்" என்று திருவுள்ளத்திற்கொண்டு அவன் வெண்சங்கொன்றேந்தி நிற்கும் கோலத்தையே காட்டிச் சம்போதனம் செய்கிருர் திருமங்கை மன்னனும். அவ்விதமே திவ்யமான கருத்துக்களுடன் பாசுரங்கள் அமைத்து அவற்றைத் தென்சொற் கடந்தானுகிய பெருமாள் கற்கும்வண்ணம், அவனையே கொண்டு வாலிக்கு உத்தரம் கூறும்படி இங்குத் திட்டஞ்செய்து அவ்வாலிக்குப்பதில்சொல்வதற்குச்சாத்தியமில்லாது பரிதவித்து நிற்கும் ஸ்திதியை ஏற்படுத்திக் கவிச்சக்கரவர்த்தியார் ஆவலிப்புக் கொண்டனரோ என்று வியக்கும்படி கிடக்கிறது இவர் கவியின் திறம். தர்மசாஸ்திரங்களின் ஆராய்ச்சியினுலும், நன்று தீதென்றுபகுத்தறியும்அறிவினுலும், தக்கவின்ன, தகாதன வின்ன என்று ஒக்க உன்னும் உணர்வினுலும், தெய்வப்பிறப்பில் தோன்றி நின்ற பெருமையாலும், ருத்ரன்பால் கொடிய தபசுபண்ணிப் பெற்ற நல்வரமுண்மையாலும் வாலி ஏனைய திர்யக்குக்களுடன் சேர்க்கப்படாது நிற்கும் உயர்ந்த பதவியை எடுத்துக் காட்டி அவன் பெருமாளுடன் வாதாடின சொற்றிறம் பொருட்டிறத்தி லிருந்தே இவன்தான் "ருமை"யைப் பெண்டாண்ட பாபத்தினின்றும் தப்புவதற்குக் காட்டிய மிருக ஒழுக்கங்கள் இவனுக்கு ஒருவிதத்திலும் பொருந்தாவென்றும் சித்தாந்தம் செய்கிருன் பிரபுவும். ஒருவன் எடுத்த சாரீரம் பற்றி அவன் செய்கையைச் சரி என்றும் தப்பு என்றும் தீர்மானித்தல் சால்புடைத்தன்று என்றும், ஞானம்பற்றியே தீர்மானித்தால் பெரியோர்கள் கடமையென்றும், ஞானமில்லாதோர் உயர்தர மக்கட் பிறவியிற்ருேன்றினும் விலங்காவர் என்றும், விலங்காய்ச் சரீரம் படைத்தோர் தர்மசாஸ்திர ஆராய்ச்சியுடன் தோன்றி நின்ருல் தெய்வப்பிறப்பாகக் கருதப் படுவார் என்றும் மானிடப் பிறவியிற்பிறவாதிருந்தும் எருவைக் கரசனும் ஜடாயு பிராட்டியின் பொருட்டாகத் தன்னுயிர் புகழ்க்குவிற்றுத் தெய்வமரணம்பெற்ற தன்மையையும் கஜேந்திராழ்வான் ஜகத்காரணவஸ்துவை, பிராணன் போக ஹேதுவான துன்பம் நேர்ந்துழி அழைத்து மோக்ஷம்பெற்ற விருத்தாந்தங்களையும் போற்றிப்பாராட்டி முடிக்கிருன். இந்த வழக்கிற்கு வாலியால் எவ்விதத்திலும் சமாதானம் கூற முடியவில்லை என்று ஏற்கனவே குறிப்பிட்டோம். ஆயினும், "நேருமன்று மறைந்து நிராயுதன் மார்பில்" எய்ததற்கு ஸ்ரீ ராகவன் ஒரு சமாதானமும் கூறவில்லை என்பது உண்மையே. (தொடரும்)

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0
குழந்தைகளுக்கு
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுதா (டானிக்) 1-0-0



தைலங்கள்:
சந்தனுதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக " 0-12-0
பிருங்காமலக " 0-12-0
ஸ்திரீகளுக்கு
ஸுதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ச்யாவனப்ராசா பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
கஸ்டாலகஸ்
ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

# கலித்தொகை

[190-வது பக்கத் தொடர்ச்சி]

## பாலைக் கலி 8.

தலைவி தன் தாய்தந்தையரைத் துறந்து, தன் மனத்திற்கினிய தலைவனோடு சென்றாள். அச்செயலைப் பின்னர் உணர்ந்த செவிலி அவளைத் தேடிக்கொண்டு காட்டிடைச் செல்லலாயினள். அவள் இடைவழியில், திரிதண்டத்தைக் கையில் ஏந்திய அந்தணர் சிலர் தன் எதிரே வருதலைக் கண்டு, அவருள் தலைவனாய் இருந்தானை நோக்கி, "பெரும,(தமக்குத்) தாமே யறிந்ததன்றிப் பிறரறியாக் கூட்டத்தாராய் இருந்தார் இருவர் இவ்வழிச் செல்லக்கண்டனையோ?" எனக் கேட்டனள். அதற்கு அந்தணர் தலைவன், "அன்னையீர், காட்டிடை அன்னோர் இருவரைக் கண்டு, அவர்செயல் அறம் எனவே கருதிப் பெயர்ந்தோம். ஆதலால் நீரும் அவர்க்குத் துன்பத்தைச் செய்ய நினையாதீர்" எனக் கூறியதைக் கூறுவது இச் செய்யுள்.

எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர் !
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும?
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவ ருயிர்நீர் போறிர்,

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே!

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே!

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே!

எனவாங்கு,

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றன
ளறந்தலை பிரியா வாறுமற் றதுவே.

(தரவு)

(வரி. 1-11) எறிதரு - வீசுதலைச் செய்கின்ற, கதிர்தாங்கி-(சூரியனுடைய) கிரணங்களைத் தாங்குங் காரணத்தால், ஏந்திய குடை நீழல் - எடுக்கப்பட்ட குடையின் நிழலிலே, உறிதாழ்ந்த கரகமும் - உறியிலே தங்கிய கமண்டலத்தையும், உரைசான்ற முக்கோலும் - (அரி, அரன், அயன் என்னும் மூவரும் ஒருவர் என்று) சொல்லும் தன்மை அமைந்த முக்கோலையும், நெறிபட - முறைமைப்பட, சுவல் அசைஇ - தோளிலே வைத்து, வேறு ஓரா நெஞ்சத்து - (இறைவன் திருநாமமே யல்லாது) வேறு ஒன்றையும் நினையாத நெஞ்சத்தோடு, குறிப்பு ஏவல் செயல் மாலை-உமது மனக் குறிப்பின் பிரகாரம் இந்திரியங்கள் ஏவல் செய்யும் தன்மையை, கொளை நடை அந்தணீர் - கொள்ளுதலைக் கொண்ட நடையை யுடைய அந்தணர்களே, வெவ்விடை செலன் மாலை - வெம்மையையுடைய காட்டிலே போதலை இயல்பாக உடைய, ஒழுக்கத்தீர் - ஒழுக்கத்தை யுடையவர்களே, இ இடை-இந்தக் காட்டிலே, என் மகள் ஒருத்தியும் - என்னுடைய மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும் - வேறொருத்தியின் மகன் ஒருவனும், தம்முளே புணர்ந்த (பிறர் அறியாமல்) தமக்குள் தாமே கூடின, தாம் அறிபுணர்ச்சியர்- தாமே அறிந்த கூட்டத்தை யுடையராயினோர், பெரும- அன்னார் இருவரைக் காணிரோ-பெரியோய், அத்தன்மையையுடைய இருவரைப் பாராது இருந்தீரோ? காணேம் அல்லேம் - பாராதிருக்கவில்லை, கடத்திடை கண்டனம் - இக்காட்டிலே கண்டோம், ஆண் எழில் அண்ணலோடு - ஆண் மக்கட்குக் கூறும் அழகினையுடைய தலைவனோடு, அருஞ்சுரம் முன்னிய - கடத்தற்கு அருமையாகிய காட்டைக் கடந்து போகக் கருதிப்போன, மாண் இழை - மாட்சிமைப்பட்ட அணியினையுடைய, மடவரல்-இளமைப் பருவத்தையுடையவளின், தாயிர் நீர் போறிர்-நீர் தாயாராய் இருக்கும் தன்மையை உடையீர் போல இருக்கிறீர்.

செவிலி சுரத்திலே சென்றுகொண்டிருந்த பிராமணர் யாவரையும் முதலில் 'அந்தணீர், ஒழுக்கத்தீர், என விளித்துப் பின்பு அவருள் தலைவனாய் இருந்தானைப் 'பெரும' என்று அழைக்கலாயினள்.

(தாழிசை)

(வரி. 12—14) பல உறு நறும் சாந்தம் - பல வாசனைத் திரவியங்கள் கூடுதற்குரிய வாசனை பொருந்திய சந்தன மரங்கள், படுப்பவர்க்கு அல்லதை - (அரைத்துப்) பூசிக்கொள்ளுகிறவர்க்குப் பயன்படுமே யல்லாமல், மலையுளே பிறப்பினும் - மலையிலே பிறந்தாலும், மலைக்கு அவைதாம் என் செய்யும் - அம்மலைக்கு அம்மரங்கள் என்ன பயனை உண்டாக்கும், நினையும்கால் - ஆராயும் பொழுது, நும்மகளும் நுமக்கு ஆங்கு அனையள் - உம்முடைய மகளும் (பயன்படும் பருவத்தில்) உமக்கு அம்மரங்களைப் போன்றவளே யாவாள். (பயன்படாள்.)

(வரி. 15—17) சீர்கெழு வெண் முத்தம் - தலைமை பொருந்திய வெண்மையான முத்துக்கள், அணிபவர்க்கு அல்லதை - அணிபவர்களுக்குப் பயன் படுதல் அல்லாமல், நீருளே பிறப்பினும் - கடலிலே பிறந்தனவாயினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும் - அக்கடலுக்கு அம்முத்துக்கள் என்ன பயனைக் கொடுக்கும், தேருங்கால் - ஆராயும்பொழுது, நும்மகளும் நுமக்கு ஆங்கு அனையள் - உம்முடைய மகளும் (பயன்படும் பருவத்தில்) உமக்கு அம்முத்துக்களைப் போன்றவளே யாவாள். (பயன்படாள்)

(வரி. 18-20) ஏழ் புணர் இன்னிசை - ஏழு நரம்புகளின் கூட்டுறவால் எழும் இனிய ஓசைகள், முரல்பவர்க்கு அல்லதை - பாடுவோர்க்குப் பயன்கொடுத்தல் அல்லாமல், யாழுளே பிறப்பினும் - யாழினிடத்தே பிறந்தனவாயினும், யாழ்க்கு அவைதாம் என் செய்யும் - யாழுக்கு அவ்வோசைகள் என்ன பயனைக் கொடுக்கும், சூழுங்கால் - ஆராயும்பொழுது, நும்மகளும் நுமக்கு ஆங்கு அனையள் - உம்முடைய மகளும் (பயன்படும் பருவத்தில்) உமக்கு அவ்வோசைகளைப் போன்றவளே யாவாள். (பயன்படாள்)

தாழிசைகளில் 'நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையள்' என்னுந் தொடரில் உள்ள உம்மை 'நும்மகளும் நுமக்கு' எனப்பிரித்துக் கூட்டப்பட்டது.

(தனிச்சொல்)

(வரி. 21) எனவாங்கு - அசை



(சுரிதகம்)

(வரி. 22-24) இறந்த கற்பினாட்கு - மிக்க கற்பை உடையவளுக்கு, எவ்வம் - துன்பத்தை, படரன்மின் - செய்ய நினையாதீர், சிறந்தானை வழிபடீஇ - (தாய் தந்தையர்களைக்காட்டிலும் சிறந்த கணவனை வழிபட்டு, சென்றனள் - (அவன் பின்னே) போனாள்,மற்று அதுவே அறந்தலை பிரியா ஆறு - (அவள் சென்ற) அச்செயலே தரும வழியினின்று மாறாத முறையாகும்.

# யாப்பிலக்கணம்

[195-வது பக்கத் தொடர்ச்சி]

### செய்யுள்—வெண்பா

**சென்ற** வார இதழில் வெண்பாவின் வகைகளுள் **இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா** என்பனவற்றைக் கற்றோம். இவ்விதழில் **சவலை வெண்பா, பஃறொடை வெண்பா** என்பனவற்றைப்பற்றிக் கற்போம்:

**5. சவலை வெண்பா :**—இரு குறள் வெண்பாக்களாய், ஒரு விகற்பமுள்ள நான்கு அடிகளை உடையதாய், முதற்குறளின் ஈற்றுச் சீர் ஆசிட்டு வருவது சவலைவெண்பா என வழங்கப்படும்.

"அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். —வாக்குண்டாம்.

('இருகுறட் சவலை ஒருவிகற் பாகும்,' என்பது இலக்கணத்திரட்டிற் கண்ட சூத்திரம்.)

**6. பஃறொடை வெண்பா:**—நான்கடியின் மிக்க பல அடியான் வருவன பஃறொடை வெண்பா என வழங்கப்படும். அஃது **ஒத்த விகற்பப் பஃறொடை வெண்பா, ஒவ்வா விகற்பப் பஃறொடை வெண்பா** என இரு வகைப்படும். இப்பாவிற்கு ஒருசா ராசிரியர் ஐந்தடி சிறுமையும் ஏழடி பெருமையும் சிறப்பாமெனக் கொண்டனர். மற்றொருசா ராசிரியர் இது பல அடியாலும் வருமென வரையாது கூறினர்.

சேற்றுக்கால் நீலம் செருவென்ற வேந்தன்வேற்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றந் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்.

இஃது ஒரு விகற்பத்தால் வந்த ஐந்தடிப் பஃறொடை வெண்பா.

பன்மாடக் கூடல் மதுரைப் பெருந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்.

இது பல விகற்பத்தால் வந்த ஆறடிப் பஃறொடை வெண்பா.

வையக மெல்லாம் கழனியா: வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்: செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு: வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள்: சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம்: கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி அகம்.

இது பல விகற்பத்தால் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

மலைமேல் மரங்கொணர்ந்து மாண்புடைத்தாச் செய்த
நிலையொத்த வீதி நெடுமாடக் கூடல்
விலைத்தயிர் கொள்ளீரோ என்பாள் முலையிரண்டும்
சோழன் உறந்தைக் குரும்பையோ! தொண்டைமான்
வேழஞ்சேர் வேங்கடத்துக் கோங்கரும்போ! ஈழத்துத்
தச்சன் கடைந்த இணைச்செப்போ! அச்சுற்றுள்
அன்னமோ! ஆய்மயிலோ! ஆரஞர்நோய் செய்தாளை
இன்னந் தெரிகிற் றிலம்."

இஃது எட்டடியான் வந்த பல விகற்பப் பஃறொடை வெண்பா.

சிற்றியாறு பாய்ந்தாடும் சேயரி உண்கணாப் !
வற்றா வளவயலும் வாய்மாண்ட வேரியும்
பற்றார்ப் பிணிக்கும் மதிலும் படுகிடங்கும்
ஒப்ப உடைத்தாய் ஒலியோவா நீர்ப்புட்கை
தத்தி இரைதேரும் தையால்நின் ஊர்ப்பெ
ஒத்தாய வண்ணம் உரைநீ எனக்கூறக்
கட்டலர் தாமரையுள் ஏழும் கடுமான்தேர்
கத்திருவர் ஐவரும் காயா மரமொன்றும்
பெற்றவிழ்தேர் துண்ணுத பேயே யிருதலையும்
வித்தாத நெல்லின் இறுதியும் கூட்டியக்கால்
ஒத்தியைந்த தெம்மூர்ப்பெயரென்றாள் வானவன்கை
விற்பொறித்த வேற்புருவத் தாள்."

இது பன்னீரடியால் வந்த பஃறொடை வெண்பா. 'இன்னும் பலவடியான் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும் புராணசாகரமும் முதலாகவுடைய செய்யுட்களிற் கண்டுகொள்க,' என்றார் யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியர்.

ஒருசா ராசிரியர் குறள் வெண்பாவை **ஓரடி முக்கால்** என்றும், சிந்தியல் வெண்பாவை **ஈரடி முக்கால்** என்றும், நேரிசை வெண்பாவை **நேரிசை மூவடி முக்கால்** என்றும், இன்னிசை வெண்பாவை **இன்னிசை மூவடி முக்கால்** என்றும், பஃறொடை வெண்பாவைப் **பலவடி முக்கால்** என்றும் வழங்குவர்.

செப்பலோசையிற் சிறிது சிதைந்து வழங்கும் பஃறொடை வெண்பா, **கலி வெண்பா**வாகக் கொண்டு வழங்கப்படும்.

வேற்றுத் தளையும் அடியும் விரவாது, தூய்மை பெற்று,எல்லாப் பாவினுள்ளும் இது சிறப்புடையதாதலின், **வெண்பா** என்பது காரணப் பெயராம். மக்களுள் மிகவும் குறுகிய வடிவமுடையவனைக் குறளன் என்றும், அவனைவிடச் சற்று உயர்ந்த வடிவையுடையவனைச் சிந்தன் என்றும் வழங்குவர். அவ்வாறே இரண்டடி யுடையதைக் குறள் வெண்பா என்றும், மூன்றடி யுடையதைச் சிந்தியல் வெண்பா என்றும் கூறியது காரணப் பெயராம். நேர்மையான (தகுதியான) இசை உடையதை நேரிசை வெண்பா என்றும், இனிய ஓசை யொன்றே பெற்றதை இன்னிசை வெண்பா என்றும், பல தொடை (பல அடி) பெற்று வருவதைப் பஃறொடை வெண்பா என்றும் வழங்கியதும் காரணப் பெயரேயாம்.

# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[194-வது பக்கத் தொடர்ச்சி]

கா

684 காகுளி மூக்கி லெழுந்த ஓசையும்
இசையுந் தவிசு மிசைத்தனர் புலவர்.
685 காசு குற்றமுங் கோழையு மணியும்
காசின் விகற்பமுங் கழற லாகும்.
686 காசை நாணலுங் காயா மரமும்.
687 காசறை மணியு மயிருறு சாந்தும்
கத்தூ ரியுமெனக் கழற லாகும்.
688 காஞ்சிமே கலையுங் காஞ்சி நகரும்
பண்ணும் பூணும் நிலையின்மையு[1] மரமும்
எதிரூன் றுதலும் பெருமையுங் காட்சியும்.
689 காடுபொன் காடு மேனலு மாகும்.
690 காட்டங் குதிரையும் விறகு மாகும்.
691 காடி நெய்யுஞ் சோறுங் கறியும்
கூழு மெனவே கூற லாகும்.
692 காட்டி பிராட்டியும் பன்றியு மாகும்.
693 காணம் பொற்காசும் பொன்னுஞ் செக்கும்
பரியூணும் கண்ணு மளவோரு மாகும்.
694 காண்ட மிடுதிரையுந் நீயுங் கானும்
முடிவுங் கமண்டலமு நீரு மம்பும்
பணிச்செப்பும் பர்தியுந் தூண்டா யுதமும்
தூசுங் கோலுங் காண்டமு நூலும்
திரளு மெனவே செப்ப லாகும்.
695 காணி யிலக்கமுங் காணி யாட்சியும்.
696 காண்டை கற்பாழியுந் தவத்தோ ரிடமும்.
697 காதை சொல்லுங் கதையு மாகும்.
698 காத்திரங் கனமு முடலுங் கோபமும்
கரிமுற் காலுங் கிரியும் பாம்பும்
கூத்து மெலும்புங் கூற லாகும்.
699 காது கொலையுஞ் செவியு மாகும்.
700 காத லாசையுங் கோறலு மாகும்.
701 காந்தாரம் காடுமோர் பண்ணு மாகும்.
702 காப்பு நீறுந் தூசம் வேயும்
காவலுங் கதவுங் கைவளையு மாகும்.
703 காம மரங்குடியுங் கட்டு மிறையும்
விருப்புங் காமமும் விளம்ப லாகும்.
704 காம்பு வேயு மலர்த்தாளும் பட்டும்.
705 காமன் றிப் பிலியும் வேளும் வண்டும்.
706 காமர மிசையு மத்தமு மடுப்பும்.
707 காமர் கட்டழகும் விருப்பமு மதனும்.
708 காம்பீர முருக்குமோர் தேசமு மாகும்.
709 காயங் காழ்ப்பு முடலும் விண்ணும்
கறியுங் கரிப்பும் முக்காயமு மாகும்.
710 காரியோர் வள்ளலுஞ் சனியு நஞ்சும்
வடுகனுங் கருமையுங் கருமஞ் செய்யிடமும்
சாத்தனுங் காகமும் புரந்தரனுங் கள்ளும்
பூரியருங் கயவாயும் முதுநிலமும் [என்பர்.]
711 கார்கார் காலமு மேகமு நீரும்
கருமையுங் கொச்சையு மிருளு முதவுஞ்
சினமும் பருவமுங் கூந்தலு மனம்முங்
கடைமுடியு மளவுங் கழற லாகும்.
712 காரிகை யழகும் பெண்ணுங் கலித்துறையும்
ஒருநூ லுமென வுரைக்க லாகும்.
713 காலம் வைகறையுங் காலமு மாகும்.
714 காலை வைகறையு நாரையுங் காலமும்.
715 கால்குறுத் தறியும் வழியுமோ ரெண்ணும்
எல்லையு மிடமு மறலியு முளையும்
காற்றுஞ் சேயுங் காடும் பாதமும்
மரக்கா லும்பூங் காம்பும் ஊற்றமும்
வண்டிலும் வாய்க்காலும் வழங்க லாகும்.
716 காலிலி சூரியன் பாகனுங் காற்றும்
அரவு மருக்கனு மீனுஞ் சனியும்.
717 காலச மால வட்டமுங் காற்றும்
வட்டமு மெனவே வழங்க லாகும்.
718 காவல் சிறையு நீரு மரணும்
தம்பட் டமுமெனச் சாற்ற லாகும்.
719 காவி கருங்குவளையுங் காவி மண்ணும்
கள்ளுந் துன்பமுங் கழற லாகும்.
720 காழ்பரலுங் கோலும் வித்து மாலையும்
ஒளியும் மணியின் கோவையும் சேகும்.
721 காழகங் கழுதையு மாடையுங் கறுப்பு
சேதக முமெனச் செப்ப லாகும்.
722 காழியர் பரதரும் வண்ணரு மாகும்.
723 காளிந்த மேலமும் பாம்பு மாகும்.
724 காளை யேறு மிளையோனு மீளியும்
புங்கவ மும்மெனப் புகல லாகும்.
725 காளம் விடமுங் கருமையுங் கழுவும்
ஊது சின்னமு முரைக்க லாகும்.
726 காறு கொடுமையுங் குற்றமு மளவுங்
காழ்த்தலு மெனவே கழற லாகும்.
727 கான மிசையும் பேதையுங் காடும்
தேரும் வீதியுமெனச் செப்ப லாகும்.
728 கானல் கதிரொளியுங் கடற்சார்பிற் சோலையும்
மலைச்சார்பிற் காயும் பேய்த்தேரு மாகும்.
729 கான்பூ மணமும் பூவுங் காடும்
சாரியை யுமெனச் சாற்ற லாகும்.
730 காவலியுந் துலையுஞ் சோலையுங் காத்தலு
கற்பக முங்கா வடியும் வயாவும்.

கி

731 கிங்கிரர் தூதரும் ஓர்சா தியரும்.
732 கிஞ்சுகஞ் சிவப்பு முருக்கு மாகும்.
733 கிடையே வேணியு முவமையுங் கிடையும்.
734 கிட்டி தலையீற் றாவுங் கிட்டியுந்
தாளமு மெனவே சாற்ற லாகும்.
735 கிடங்கே யகழும் வாவியு மாகும்.
736 கிம்புரி யானைக் கோட்டின் பூணும்
கேயூரமு முடியு முடியி னுறுப்பும்.
737 கிருட்டிணன் மாலும் விசையனு மாகும்.
738 கிருத்திமஞ் செய்தலும் தோலும் பொய்யும்
பூதமு மெனவே புகல லாகும்.
739 கிழிகிழி துகிலுஞ் சித்திரப் படமும்
நிதிபடு பொதியுமென நிகழ்த்த லாகும்.
740 கிழக்குக் கீழுங் குணக்கு மாகும்.
741 கிழமை மூப்பு முரிமையும் வாரமும்
குணமு மாட்சியுங் கூற லாகும்.
742 கிளர்கோட் டுப்பூந் தாது மெல்லும்
743 கிளைகிளைத் தலும்ஓர் பண்ணும் வேயுஞ்
சுற்றமு மெனவே சொற்ற லாகும்.
744 கிள்ளை குதிரையுங் கிளியு மாகும்.
745 கிறியே வழியும் பொய்யு மாகும்.
746 கின்னர[2] மார்க்கையு மியாழு மிதுனமும்
கீர்ப்புள் ளுங்கின் னரமு நிகழ்த்தும்.

(பிரதி) 1. முரச்சையுமாகும். 2. மிரச்சையு.




சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

**தமிழகராதி ஆதார நூற்றொகுதி**
**நாம தீப நிகண்டு.**

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

**அரும்பொருள் விளக்க நிகண்டு.**

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

**கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.**

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

**திருக்குறள்**
மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

**களவியற் காரிகை.**

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

**நூற்பொருட் குறிப்பு.**

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

**இராஜசுந்தரம்.**

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

**தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா**

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு 0-6-0

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**



**திராவிடப் பிரகாசிகை**

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவானய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகுபெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ருங பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரு 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், துவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, 10, [illegible]ர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை.



**ANCIENT JAFFNA**

**MUDALIAR C. RASANAYAGAM c. c. s.**

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

KALANILAYAM
Purasawalkam, Madras.

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:**—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.



## வர்த்தமானம்

**தங்க ஏற்றுமதி:**—மார்ச்சு மாதம் 8-ந்தேதியிட்டு வந்த ஒரு அயல்நாட்டுச் செய்தி கூறுவதாவது:— 1933-வது ஆரம்ப முதல் மார்ச்சு மாதம் 8-ந்தேதி வரை இலங்கிலாந்திற்கு வந்துசேர்ந்த தங்க மதிப்பு 40117991 பவுன்.

***

**ராஜப்பிரதிநிதிக்குத் தந்தி:**—தஞ்சை நெல் வியாபாரச்சங்கக் காரியதரிசியான ஸ்ரீமான் கே. ராமஸ்வாமி ஐயர் ராஜப்பிரதிநிதிக்கு விடுத்துள்ள தந்தி:—

இப்பொழுது தஞ்சை ஜில்லாவில் நெல்விலை மிகவும் குறைந்துளது. ரயில்வே கட்டணமோ மிக உயர்ந்திருக்கின்றது. எனவே நெல்வியாபாரமே தஞ்சை ஜில்லாவில் நடக்கவில்லை. விவசாயிகள் நெல்லை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகின்றார்கள். இப்பொழுது சிலோன் வியாபாரம் இல்லை. இந்நிலையில் விவசாயிகளின் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய அரசாங்கம் முயற்சிசெய்யவேண்டும். எனவே வாயிதா விகிதத்தைக் குறைக்கவேண்டுவது அவசியம்.

***

**ஆப்கன் அரசாங்க முறை:**—ஆப்கானிஸ்தானத்து வாலிபர்கள் ஐரோப்பிய மாதர்களை மணக்க அதிகமும் விரும்புகின்றனர். இதை யொட்டி ஆப்கன் அரசாங்கம், ஆப்கன் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், இராணுவ உத்தியோகஸ்தர்களும் அயல்நாட்டுப் பெண்களை மணக்கக் கூடாதென்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் படிப்பதற்காகச் சென்றிருப்பவர்கள் அரசாங்கத்தார் உத்தரவின்றி அயல்நாட்டுப் பெண்களை மணக்கக் கூடாதென்று அரசாங்கம் மேற்படி மாணவர்களுக்கு அறிவித்திருக்கின்றது.

***

**எவரஸ்ட் சிகரத்தைக் காண முயற்சி:**—எவரஸ்டு சிகரத்தைக் காண்பதற்காக ஐரோப்பாவிலிருந்து ஒரு கூட்டத்தார் இந்தியா வந்திருக்கின்றனர் என்றுதெரிகின்றது.

***

**ராஜப்பிரதிநிதி அறிக்கை:**—ராஜப்பிரதிநிதி இந்தியச் சட்டசபைக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில், சட்ட சபை இப்பொழுது கலைக்கப்படாதென்றும், இன்னும் ஒருவருஷத்திற்குச் சட்டசபையின் காலம் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றதென்றும் அறிவித்திருக்கின்றாராம்.

***

**டிராம்வேத் தொழிலாளர் மஹாநாடு:**—சென்ற வாரம் சென்னை டிராம்வேத் தொழிலாளர் மஹாநாடு டாக்டர் சுப்பிராயன் தலைமையில் கூடிற்று. டாக்டர் சுப்பிராயன் மனைவியார் தொழிலாளர் சங்கக் கொடியை ஏற்றிவைத்தார். அவர் பெண்களின் உரிமையின் அவசியத்தை எடுத்துக் கூறினார்.

***

**ஸ்ரீ ராதாகிருஷ்ணன் உபந்நியாசம்:**—ஆந்திர சர்வகலாசாலை வைஸ் சான்ஸலரான புரொபஸர் ராதாகிருஷ்ணன் சகந்தராபாத் கல்லூரியில் "நமது கடமை" என்பது பற்றிச் செய்த உபந்நியாசச் சுருக்கம் வருமாறு:—நாம் இதுபொழுது அடைந்திருக்கின்ற நாகரிகத்தைப்பற்றிப் பெருமை பாராட்டிக்கொண்டு கிராமத்திலே வாழ்கின்ற ஜனங்களை நாகரிகத்திலும் வாழ்க்கைச் சிறப்பிலும் தாழ்ந்தவர்கள் என்று கருதுகின்றோம். சினிமா, ஆகாயவிமானம், கொல்வதற்கு உதவிசெய்யும் இயந்திரங்கள் இவைகள் நமது வளர்கின்ற நாகரிகத்தின் குறிகளாகவிருக்கின்றன. ஆனால் இவைகள் நம்மனம் நாடும் சந்தோஷத்தை நமக்குத் தருவதில்லை. எனவே இவ்வியந்திர நாகரிகம் நம் மனதை நிறைத்துவைக்கும் [illegible]வில்லை.

ஆதலால் தேகம், மனம், ஆன்மா இவைகளின் அபிவிர்த்தியும் ஏககாலத்தில் ஏற்படவேண்டும். மேனாடுகள் தேகாபிவிர்த்தியில் மாத்திரம் நாட்டம் வைத்திருக்கின்றது. நம் பண்டை இந்தியாவோ, மனம் ஆன்மா இவைகளினிடம் மாத்திரம் நாட்டத்தைச் செலுத்தியது.

தினசரி வாழ்க்கையில் நம்மைச் சுற்றியுள்ள எல்லோருக்கும் உபயோகமுள்ள வழியில் நாம் முயலவேண்டும். ஆத்மநலந் தேடுவதோடு நில்லாமல் சமூகநலத்தையும் நாம் தேடவேண்டும். பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா ஆத்மநலத்தை மாத்திரம் கூறிவைத்தார் அல்லர். உலகத்தையும் அவர் மறக்கவில்லை. அர்ஜுனனுக்கு உலக அனுபவ சாத்தியமான நெறியையும் உபதேசித்திருக்கின்றார். எனவே தான் கீதையில் கடைசி சுலோகத்தில் யோகீச்வரனை ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் பேரும் தனுர்தாரனை அர்ஜுனன் பேரும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதுதான் இப்பொழுது இந்தியாவிற்கு வேண்டியது. ஆத்ம நலத்தோடு நில்லாமல், உலக வாழ்க்கைக்குரிய வழியிலும் நாம் முன்னேற வேண்டும். பின் வழியில் மேனாட்டார் முன்னேறியிருக்கின்றனர். அவரையும் நாம் பின்பற்றவேண்டும்."

இன்னபடி தத்துவ அறிஞர் இராதாகிருஷ்ணன் கூறுவது 'மலையிலிருந்து கீழேயும் விழு, ஆனால் காயம் ஒன்றும் ஏற்படலாகாது.' என்பதுபோல் இருப்பதால் இவ்வுரை எக்கருத்தினது என்று எமக்கு விளங்கவில்லை.

***

**விவாஹரத்து விநோதம்:**—பாரிஸில் ஒரு தம்பதியிருந்தனர். சமீபத்தில் விவாஹரத்துக் கோர்ட்டில் மனைவி ஒரு வழக்குக் கொண்டுவந்தாள். தன் புருஷன் தூங்குகையில் பலமாகக் குரட்டை விடுகின்றான் என்றும், அதனால் தனக்குத் தூக்கம் கெடுகின்றதென்றும், வேறு அறையில் படுத்தாலும் அவன்விடும் குரட்டை நித்திரைக்குப் பங்கம்செய்து, தனது உடல் சுகத்தைக் கெடுப்பதால் விவாஹரத்துச் செய்துகொள்ளவேண்டும் என்றும் அவள்மனுச் செய்தாள். மற்றொருத்தி, பாதரட்சையுடன் கணவன் இரவில் தூங்குவதால் தான் அவனோடு வாழ முடியாதென்று ஒரு வழக்குத் தொடுத்தாள். இது வளர்கின்ற ஜனநாயக முன்னேற்றம்.

***

**ஐரோப்பாவில் தகன முறை:**—இப்பொழுது ஏற்பட்டுள்ள பணக்கஷ்டம் காரணமாக ஐரோப்பாவில் பிரேத அடக்கம் செய்வதற்குப் பதிலாக ஏழை மக்கள் பிரேதங்களைத்தகனம் செய்து வருகின்றனராம். 1931-வது வருடத்தில் இங்கிலாந்தில் 5145 பிரேதங்கள் தகனம் செய்யப்பட்டனவாம். 1932 இல் 6315 பிரேதங்கள் தகனம் செய்யப்பட்டனவாம். மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் இத் தகனமுறை இன்னும் அதிகமாகப் பரவியுள்ளதென்றும், இம்முறையினால் செலவுக்குறைவும்சுகாதாரமும்உளதென்றுஐரோப்பியர் அபிப்பிராயப்படுகின்றனர்என்றும் தெரிகின்றது.

***

**நீக்ரோ ரசாயன நிபுணர்:**—அமெரிக்காவிலுள்ள ஒரு நீக்ரோ வகுப்பினைச்சேர்ந்த ஒரு இரசாயன நிபுணர் வெங்காயத்திலிருந்து பலவிதமான சாயங்களைச் செய்யும் முறையைக் கண்டுபிடித்திருக்கின்றாராம். மரத்தூளிலிருந்து பளிங்குபோன்ற ஒருபலகையைச் செய்யும் முறையொன்றும் அவரால் கண்டுபிடிக்கப் பெற்றுளதாம். இப்பளிங்குப் பலகை கட்டட வேலைக்கு உபயோகமாகும் என்று தெரிகின்றது. வெங்காயத்திலிருந்து குறைந்த செலவில் சாயம் கிடைக்குமாகையினால் சாயவியாபாரத்திற்கும் பங்கம் வரலாம் என்று பிறநாட்டு வியாபாரிகள் அஞ்சுகின்றனராம்.

KALANILAYAM
Reg. No. M. 2324.


## — கம்ப ராமாயணம் —

### பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0. | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்வல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

**ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்**

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

**கற்பக மலர் (சிறு கதைகள்)**
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

ஒரு முக்கிய சங்கீத நூல்
**"வர்னமாலிகை"**

சங்கீத ஆசிரியர்களுக்கும் கர்னாடக சங்கீதம் அப்பியசிக்கிறவர்களுக்கும் வேண்டிய நூல். ஒவ்வொரு மாணாக்கர் கையிலும் சங்கீத பாடசாலைகளிலும் இருக்க வேண்டியது. 40 ராகங்களுக்கு லக்ஷணங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 12.

வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதராஸ்,

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)